பிருகுமுனிவர் மாந்த்ரீகம்



தாமரை நூலகம், சென்னை - 600 026.

பிருகு முனிவர் மாந்திரீகம்

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, என்.ஜி.ஓ காலனி வடபழனி
சென்னை -26
தொலைபேசி எண் : 4800249

தாமரை வெளியீடு எண் : 60
இரண்டாம் பதிப்பு : மே 2015
மூன்றாம் பதிப்பு : மே 2017
நான்காம் பதிப்பு: ஜூன் : 2022
உரிமை பெற்றது

நூல் விவரம்

நூலின் பெயர்	:	பிருகு முனிவர் மாந்த்ரீகம்
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம், 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை- 26
பதிப்பு ஆண்டு	:	**ஜூன் : 2022**
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	18 x 12.5 செ.மீ
அச்சுத்தாள்	:	10.7 வெள்ளைத்தாள்
அட்டை	:	13.2 சேஷாயி
டைப் செட்டிங்	:	கார்த்தி கிராபிக்ஸ் சென்னை-26
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	64
பிரதிகள்	:	1200
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ. **35**
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை- 34.

91/4

பதிப்புரை

பிருகு மாந்த்ரீகம் என்ற இந்நூல் மிகவும் பழமையான அபூர்வமான நூலாகும். இதில் உள்ள அனைத்து முறைகளும் சாதாரண பாமர மக்களுக்கு என்றே செய்யப்பட்டதாக பிருகு முனிவரே கூறுகிறார்.

மேலும் மற்ற மாந்த்ரீக நூல்களில் எடுத்த எடுப் பிலேயே பெரிய மந்திரங்களை, செய்யமுடியாத அளவிற்கு கடினமானவையாகக் கூறிவைத்துள்ளனர் என்றும் அதிலுள்ள முறைப்படி செய்தால் மாந்த்ரீகம் சித்தியாகாது என்றும், பிருகு முனிவரே இந்நூலில் கூறியிருக்கிறார்.

முதலில் "அ" விலிருந்து ஃ வரையிலும் பிறகு "க" முதல் "ன" வரையிலும் தனித்தனியாக அக்ஷரத்தை செபித்து சித்தி செய்து கொண்ட பிறகே மற்ற மாந்த்ரீக கர்மங்கள் செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்யும் போது பஞ்ச பூதங்களை முதலில் சித்தி செய்து கொண்டே மற்ற கர்மங்கள் செய்ய வேண்டுமென்றும் இந்நூலில் பிருகு முனிவர் கூறியிருப்பது முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சமாகும்.!

அதுமட்டுமின்றி மற்ற எந்த மாந்த்ரீக நூலிலும் கூறியிராத மற்றொரு அம்சமும் உள்ளது. அதுதான் "ஆகாயத்தில் பறந்து செல்லும் முறையாகும்" இதற்கு மணியோ, ஔஷதமோ, அஸ்திரமோ, விமானமோ தேவையில்லை. தானே தன்னுடைய மாந்த்ரீக பலத்தால் பறக்கக்கூடிய முறையை கூறியிருக்கிறார்.

இந்த நூலில் முனிவரால் எழுதப்பட்டதாக சொல்லப்படும். மற்ற கிளைநூல்களும் விரைவில் வெளிவரும்.

அந்த நூல்களில் ஒன்றான, தத்வ யோகத்தில் சகல மதத்தவர்களும் படித்துப் பயனடையும் வண்ணம் மத சம்பிரதாயங்களில்லாமல் பிருகு முனிவர் செய்துள்ளார். இதில் எந்தவிதமான மந்திரங்களோ எந்திரங்களோ கூறப்படவில்லை. அனுதினமும் பழகிவரவேண்டிய எளிமையான தியான முறைகளும். அதனைக் கொண்டு, கூடுவிட்டுக் கூடுபாய்தல், மற்றவர்களின் மனதை அறிதல், உலகத்தில் உள்ள சகலவிதமான பாஷைகளையும் அறிதல், மிருகங்கள், பட்சிகள், போன்றவைகளின் பாஷைகளை அறிதல், யாருங் காணமுடியாதபடி மறைந்து கொள்ளுதல், நினைத்த இடத்திற்கு மனோவேகத்தில் செல்லுதல் போன்ற முறைகளைப் பற்றியும் விளக்கியுள்ளார். ஒவ்வொரு மனிதரும் படித்துப் பயனடைய வேண்டிய அருமையான நூலாகும். இதுவிரைவில் வெளிவரப் போகின்றாது.

கடைசியாக ஒன்று. இந்த பிருகு மாந்திரீகம் என்ற நூலைக் கொடுத்தும் மிகத்தெளிவாக உரை எழுதித் தந்தவருமான மந்த்ர, எந்த்ர, தந்த்ர, ஸாத்திர மாமணி, டாக்டர். ஆர். கோவிந்தராஜன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் தத் ஸத் !

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்.

91/4

பிருகு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய மாந்திரீகம்.....100

ஆதியாம் பஞ்சகரன் தன்னை யீன்ற
அம்மை யப்பன் திருவடியை போற்றி செய்து
சோதியாம் மூலக் குண்டலியில் நந்தி!
சொற்பொருளாம் மனோன்மணி யாத்தாள்.
பாதம்
ஓதியே வேதமதை சென்னி வைத்துப் போற்றி
விளங்க வெனா மனந்தன்னை நிறுத்தும்யோகம்!
சேதியாம் மாந்திரீகஞ் சொல்லுவேன் பாலா கேளு
சதிராக மனங்கொண்டு நோக்கு நீயே ! 1

ஆதி மூலப்பொருளான விநாயகப் பெருமானை பெற்றவர்களான சிவனையும், சக்தியையும் தூய மனங் கொண்டு வணங்கியும் மேலும் மூலாதாரத்திலுள்ள குண்டலி பீடத்தில் நந்திபகவானை வணங்கியும், ஆத்தாளான மனோன்மணியை வேதங்களால் துதித்து போற்றி வணங்கி மனதை ஒரு நிலைப்படுத்தி மேன்மை யுண்டாக்கக் கூடிய யோகமான மாந்திரீகம் சொல்கிறேன் சீடனே கேள்! என் வார்த்தைகளை வெளியோடாத மனங்கொண்டு கூர்ந்து நோக்குக.

நோக்குவது எங்கென்றால் குருபதத்தை மைந்தா
நெடிதுநாள் தொண்டுடனே பணிகள் செய்து
பாக்கு முதல் தாம்பூலம் கனிகள் புட்பம்!
பக்குவமாய் தட்சிணையுடன் பண்பாய் தானும்
தாக்குதல் இல்லாது சொல்லினிமை கொண்டுந்
தடிபோலே வீழ்ந்துமே வணங்கி நின்றால்
பாக்கியமாம் பூர்வத்தின் விட்ட குறை தன்னால்
பலித்திடுமே தேவதா வசியமென்ற மாந்திரீகந் தானே! 2

கூர்ந்து நோக்குவது எங்கே ? என்று நீ கேட்ப்பாயாகில் அது குருபதமே என்று நீ அறிந்து கொள்ளல்வேண்டும்! முறையாக ஆசானிடம் சென்று பலவருடங்கள் பணி விடைகள் செய்தும், கனி வகைகள், பூ, பாக்கு வெற்றிலை தக்ஷிணைகள் போன்றவற்றை அளித்தும், அடக்கமாக இனிமையான சொல்லால் மகிழவைத்து பூமியில் தடிபோல் வீழ்ந்து வணங்கி ஆசிபெற்றால், சகல தேவதைகளையும் வசியம் செய்யக்கூடி மாந்திரீகம் என்ற சித்தி கைக்குள்ளாகும்! ஆனால் இதற்கு பூர்வ ஜென்மத்தில் விட்ட குறையிருத்தல் வேண்டும் (ப்ராப்தம் வேண்டும்).

தானான சற்குருவே கிட்டாட்டால் மைந்தா
தயவான என்னூலைக் குருபோன் றெண்ணு
கோனான ஆதிபொருள் சற்குரு வாச்சு
குறிப்புடனே குருபதத்தில் நின்று போற்ற
தேனான மதியமுதம் பொங்கிப் பாயும்!
தெவிட்டாத ஞானம் வந்து கூடுமையா
ஏனோதான் இந்த வழி விட்டார் கோடி!
எழிலாக பிடித்தவனே சித்த னென்னே. 3

நல்ல யோக நெறியில் நின்ற குரு (மானுடகுரு) கிடைக்கவில்லை என்றால் மாந்திரீக காவியமான இந்த நூலையே குருவாக பாவித்து குருபதமான சகஸ்ராரத்தில் மனதை நிறுத்தி பரம்பொருளைப் போற்றி நின்றால் ஆதிபொருளான பரப்பிரம்மமே உனக்கு குருவாக வந்து நின்று வேண்டியதை யளிக்கும்! அதுமட்டுமின்றி சகஸ்ராரத்தில் உள்ள அமுதகலசத்திலிருந்து அமுர்தமானது பொங்கி கண்ட கூபத்தில் வந்து விழும். இதனால் ஞானமும் யோகமும் உண்டாகும் ! இவ்வெளிமையான முறையை பின்பற்றாமல் கோடானு கோடி பேர்கள் பூமியில் பிறந்து

மாண்டனர். ஆனால் இந்த ஞான யோக நெறியை பின்பற்றியவர்களே சித்தர் என்று பெயர் பெற்று நின்றனர்!

என்னியே மாந்திரீக கர்மந் தன்னை
எடுக்கு முன் மனமடங்கி நிற்றல் வேண்டும்
பின்னியே வீருதம் போல் ஏங்கி நின்று
பிரலபித்துத் தவிக்கின்ற மனதைத் தள்ளு
கன்னியாம் மாது என்ற மடந்தைப் பேரில்
காமாதி மயக்கமதை வெறுத்துத் தள்ளு!
தன்னிடத்தில் வந்து நின்று தொண்டு செய்யும்
தருக்கிலா விழியாளைக் கூடி நில்லே! 4

மாந்திரீகம் என்ற தொழிலை அறிந்து கொள்வதற்கு முன்பாக மனதை ஓர் நிலைப்படுத்தி திடமாக்கி உறுதிப் படுத்தவேண்டும். அவ்வாறின்றி கொடிமரங்களைப் போல் பல கிளைகளாகவும் சிக்கலாகவும் உள்ள மனது துன்பத்தைத் தரும். ஆகவே மனதிலுள்ள குழப்பங்களையும் கவலைகளையும் நீக்கி, பெண்ணாசை விட்டு, தன்னுடைய மனைவியை மட்டும் சேர்த்தணைத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்!

நில்லென்று சொன்னதொரு வார்த்தைகேட்டு
நித்தியமுங் கூடி நீ நிற்க வேண்டா
மல்லென்ற பக்ஷத்திற் கொருமுறையே கூடி
மாயைவிட்டு மனமதனை மூலஞ்சாடு
சில்லெனவே மனந்தானுங் குளிர்ந்து காணும்!
சித்தெட்டுஞ் சிறப்பாக வாடுமையா!
கொல்லெனவே உயிர்வதையை சாடித் தள்ளு
குவலயத்து உயிர்களையே தன்னுயிர் போலென்னே! 5

உன்னுடைய மனைவியுடன் கூடிநில் என்று சொன்னதால் அனுதினமும் போகம் செய்து வாழவேண்டாம்! பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்ற கணக்கின்படி கூடி

நிற்றல் வேண்டும்! மற்ற நாட்களில் மனதை மூலாதாரத்தில் இருத்தி வைத்தல் வேண்டும். இவ்வாறு மனதை மூலத்தில் நிறுத்துவதால் மனமானது குளிர்ந்து போகும்! அட்டசித்தும் கைக்குள்ளாகும்! மேலும் உயிர்களைக் கொன்று தின்பதை விடுத்து உலகத்து உயிர்கள் அனைத்தையும் தன்னுடைய உயிரைப்போல் எண்ணி வாழ்தல் வேண்டும்.

ஆசை தள்ளல்


என்னவே பிறர்மனைமேல் ஆசைதள்ளு
        எடுத்தோத பிறர் பொருளின் ஆசைதள்ளு,
கன்னமே வைக்காதே காமந் தள்ளு!
        கண்மணியே மாங்கிசமும் புகையுந் தள்ளு!
பின்னமே வேண்டாம்பார் மாய்கைத் தள்ளு!
        பிசக்குள்ள கசடரை நீ சாடித் தள்ளு!
சுன்னமுடன் தாம்பூலங் கள்ளு கஞ்சா
        சுகமில்லா பொய் முதலாங் கோபந் தள்ளே! 6

மனம் மாற்றான் மனைவியின் மீதும், பிறர் பொருள்களின் மீதும் ஆசைகளும், காமங்களும் வைத்தல் கூடாது! அதுமட்டு மின்றி புலால் உணவு, புகை, பேதமாய்கை, கெட்டவர்களின் சகவாசம், சுண்ணாம்பு, வெற்றிலை, கள்ளு, கஞ்சா,பொய், கோபம் போன்றவைகளையும் நீக்குதல் வேண்டும்!

தள்ளிட்டால் யோகமுடன் ஞானங்கூடும்!
        தப்பாது ப்ருகுநூறு வையந் தன்னில்!
எள்ளியே நகையாட யேது நன்மை!
        எடுத்துரைத்த படிசெய்தால் எல்லாஞ் சித்தி
கொள்ளியே வைத்தாற் போல் எல்லா மாகுங்
        குற்ற மொன்று மாகாது குறியுஞ் சொல்ல
கள்ளிதன் முள்போன்று கூறாம் வாதம்!
        குறித்திட்டேன் ஐங்கரத்தோன் மூலங்கேளே! 7

மேற்கூறிய நடத்தைகளை நீக்குவதால், யோகம், ஞானம் போன்றவை சித்தியாகும். அதுமட்டுமின்றி மாந்திரீகம் நூறு என்ற இந்நூலில் கூறப்பட்ட முறைகள் யாவும் சித்தியாகும்! அவ்வாறின்றி இந்த நூலில் கூறப்பட்ட நெறிமுறைகளை கண்டு பரிகாசம் செய்தால் நன்மை ஒன்றும் உண்டாகாது! ஆகவே நெறிமுறைகளை பின்பற்றுவதால் தீ பற்றிய பொருளைப் போன்று வினைகள் எல்லாம் எரிந்து சாம்பலாகும்; குறி சொன்னால் தப்பாமல் பலிதமுண்டாகும்! கள்ளியின் முள்ளைப் போன்று மிகவும் துல்லியமாக வாதமும் பலிதமாகும்! இனி மூலமந்திரங்களை கேள்! இதில் முதன் முதலாக விநாயகப் பெருமானின் மூலமந்திரத்தை சொல்கிறேன் கேள்!

கணபதி மூலம்



கேளே நீ நேரில்லா முக்கோணங் கீறி
குறிப்புடனே நடுமையம் விந்து யிட்டு
ஆளே நீ வளையமொன்று வெளியே நாட்டி
அதன்மேல் அட்டவிதழ் கீறிக் கொள்ளே

பாளே நீ போகாமல் ஓங்காரந் தன்னை
பக்குவமாய் நடுமையந் தன்னில் கூட்டி
கோளே தான் சொல்லாமல் மைந்தா கேளு
குறிப்புள்ள அட்டசத்தி விதழில் நாட்டே. 8

முதலில் தலைகீழாக முக்கோணம் ஒன்று வரைந்து அதன் மத்தியில் பிந்து வரைந்து முக்கோணத்தின் மேல் ஒரு வட்டமும் வட்டத்தின் மேல் எட்டு இதழும் கீறிக்கொண்டு பிறகு முக்கோணத்தின் நடுவில் (பிந்துவில்) ஓம் என்றும் எட்டு இதழில் எட்டுவிதமான சக்தியையும் நிறுத்துதல் வேண்டும்!

நாட்டு வாய் சத்திமேல் வைரவத்தை
நலங்காமல் நான்கு வாசல் வரைகள் மூணாய்
போட்டுமே புலம்புதற்கு மூலங் கேளு
புகழான ஓங்காரம் முன்னே கூறி
வாட்டாம ரீங்கார அங்குமுங்காய்
வகையாக கணபதியே நமோ வென்று
தூட்டுவாய் பரிமளங்கள் தூப தீபந்
துண்மையுள்ள கனிவர்க்கங் காயும் வையே! 9

எட்டு விதமான சக்திகளுடன் அஷ்ட பைரவர்களையும் நிறுத்தி அதன் மேல் மூன்று வரைகளும் நான்கு வாசலுங்கீறிக் கொண்டு அந்த எந்திரத்தின் முன்பாக வாசனைத் திரவியங் களான,அத்தர்,புனுகு,சவ்வாது,கனிவர்க்கங்கள், காய்வர்க்கங்கள் போன்றவைகளை வைத்து தூபதீபங்காட்டி ஓம்-ரீங்-அங்-உங்-கணபதியே நம: என்று மந்திரம் செபித்தல் வேண்டும்!

செபமுறை

வைத்துமே ருத்திராக்கம் கையிலேந்தி
வகையாக இருலக்கம் உருவே செய்ய
துய்ய நிறங் கொண்டிட்ட ஆதிமூலம்
துணை நிற்குங் கர்மங்கள் யாவும் நோக்க,

கைதனிலே நெல்லிக்கனி போலே மைந்தா
கண்மணியே விக்கினங்களெல்லாம் நீங்கும்!
கொய்ததொரு காய்போல வினைகள் சாகும்!
கட்டநட்டந் துன்பங்கள் பறக்கும் பாரே! 10

அதாவது ருத்திராக்ஷம் என்ற மாலையால் மூலமந்திரத்தை இரண்டு லட்சம் முறை செபிக்குங்கால்: சூரியன் போல் பிரகாசிக்கின்ற கணபதியானவர் நீ எந்த காரியம் செய்திட்டாலும் தடையில்லாமல் முன் நின்று நடத்தித் தருவார். மேலும் மாந்திரீகம் என்ற தொழிலானது உள்ளங்கை நெல்லிக்காய் போல சித்தியாகும். மரத்திலிருந்து பறித்த காயானது மீண்டும் மரத்தில் ஒட்டாதது போன்று உன்னுடைய கர்ம வினைகளும், துன்பங்களும், கஷ்டங்களும் நஷ்டங்களும் பறந்து போகும்!

பாரப்பா புத்தி கொண்டு நன்மை செய்ய
புகழுலகில் வாயுப் போல் பரவலாகும்,
மாரப்பா கோள்புத்தி திருட்டு மாண்பர்
மங்கைபலர் நேயங் கொள்பவர் சகுனி கூனி
ஆரப்பா அவர்களிடம் விட்டு நீங்கி
அடக்கமாய் மனந்தன்னை மூலம் நாட்டு,
சேரப்பா கானற்பால் காமப் பால் ரெண்டும்!
சத்தியமாய் துன்பந்தருங் கர்மவினை விடுகும்பாரே. 11

மேலும் இவ்வினாயகர் வசிய மந்திரத்தின் சித்தியைக் கொண்டு உலகிலுள்ள மக்கள் அனைவர்க்கும் நீ! நன்மை செய்தாயானல் உனது புகழானது காற்று போல் நான்கு பக்கமும் பரவிநிற்கும். அதுமட்டுமன்றி, கோள்புத்தியுள்ளவர், திருடுபவர், பெண்மோகம் கொண்டவர், சகுனி,கூனி போன்றவர்களிடம் நட்புக் கொள்ளாமல், அவர்களை விட்டு விலகி தனிமையாக இருந்துகொண்டு சந்திர நாடியையும்,

சூரிய நாடியையும் சேர்த்திணைத்து சுழிமுனை நாடிவழியாக வாசியை மேலேற்றினால் துன்பங்கள் உண்டுபண்ணுகின்ற கெட்ட வினைகள் அகன்று போகும் சூரியநாடியின் (வலதுமூக்கின்) வழியாக செல்லும் மூச்சுக்கு கானற்பால் என்றுபெயர். இடது மூக்கின் (சந்திரநாடியின்) வழியாக செல்லும் மூச்சுக்கு காமப்பால் என்றுபெயர். இவ்வாறு இன்றி இரண்டும் ஒன்று கலக்குமாயின் அது சுழிமுனை என்று பெயர்.

மெய்மாந்திரீகர் லட்சணம்

விடுவார்கள் மந்திரத்தின் உளவை யெல்லாம்
விபரமாய்க் கண்டறிந்தோர் செயலைக் கேளு
தொடுகுறிகள் சொல்வார்கள் தொழில்களெல்லாம்
தொட்டவிடம் விட்டவிடஞ் சித்தாய்க் காணும்
கொடுமையிலா மனமுடையோர் கூர்ந்து பாருங்
கோடி சித்தி ஆடினாலும் வெளி வாரார்கள்,
வடுவற்றோர் வானவர்களை ஏவல் கொள்வார்
வையமொரு நொடியில் வசங் கொள்வாரே! 12

உண்மையான மாந்திரீகர் என்றால் உலகத்திலுள்ள ஒருகோடி மந்திரத்தின் பொருள்களையும், மந்திரத்தின் செயல்களையும் அறிந்தவராக இருப்பர், மேலும் அறுபத்து நான்கு விதமான மாந்திரீக தொழில்களையும் எந்த இடத்தில் வசித்த போதிலும் ஆடுபவர்களாய் இருப்பர்! அதுமட்டுமின்றி அவர்கள் கைகால் பட்ட மாத்திரத்தில் சகல சௌபாக்கியமும் உண்டாகும் பிறர்க்கு ஒருகாலும் துன்பந்தரமாட்டார்கள்! கோடானு கோடி மந்திரத்தை சித்தி செய்து கொண்டாலும் தான் வசிக்கும் குகையைவிட்டு வெளியேவரமாட்டார்கள் (இருந்த இடத்திலிருந்து கொண்டே சகலத்தையும் பார்ப்பர்). மேலும் சகலவிதமான தேவர்களையும் தன்னுடைய காரியத்தை முடித்துக் கொள்ளும் பொருட்டு வேலையாட்களாகத் தொண்டு புரியச்

செய்வார்கள்! (தேவர்களை தூது அனுப்புவார்), வினாடியில் உலகத்தையே வசியஞ்செய்து விடுவார்கள்! (உலகத்தை தன்வசப்படுத்திக் கொள்வர்.)

கொள்ளுவார் பொய்சூது பேச மாட்டார்
கொன்றை மலர் சூடினனைப் போற்றி செய்வார்,
நெள்ளுமணிப் பெரியோரை வழிபட்டு நிற்பர்
நல்லதொரு யோகமுறை தன்னில் நிற்பார்,
கள்ளமன முள்ளதோர் கயவர் முன்பு
கழறார்கள் பொருள் தன்னை கற்றோரையா,
விள்ளுவார் விவேகிகளுக் கென்பார் எல்லாம்
வெளிதனில் கற்றோமென் றியம்பார் காணே. 13

உலகத்தை வசியஞ் செய்யும், உண்மையான மாந்திரீகரானவர் பொய்கள் பேசமாட்டார். சூதுசெய்யார், கொன்றை மாலையணிந்த சிவபெருமானை அனுதினமும் போற்றி வணங்குவர், மெய்ஞானமான யோக பாதையில் நின்று கொண்டு விவேகிகளான சீடர்களுக்கு மட்டுமே உபதேசம் செய்வர்! கள்ளமனங் கொண்ட மாண்பர்களுக்கு ஒருபொழுதும் உபதேசிக்க மாட்டார். மேலும், தான் வித்தை கற்றவன் என்று வெளியுலகத்திற்கு (உலக மக்களிடம்) சொல்லமாட்டார்கள்! அடக்கமாக வாழ்வார்கள்!

இயம்பாரே மாந்திரீகத் தொழிலில் நின்று
என்று மடயோகத்தில் சேருவார்கள்
சயம் பெற்று யோகத்தைக் கடந்து பாருள்
சாருவார் மிகஞான வழி அதனில் அப்பா,
நயம்படவே கலந்துகொண்டு ஞானவானாய்
நாயகனே பிறப்பிறப்பு மற்றோ ராவர்,
லயமாகு மவர் மனது சிவமாய் நிற்கும்
இங்கவர்தம் பெருமை யினைச் சொல்லொணாதே. 14

அடக்கமாக வாழும் நல்ல மாந்திரீகர்கள் அனுதினமும் அட்டாங்க யோகத்தில் நின்று பரம்பொருளை கண்டு அளவில்லாஞானத்தைப் பெற்று பிறப்பையும், இறப்பையும், கடந்து (அகற்றி). தன்மனதை சிவத்துடன் ஒன்றி வைத்து தான் தானாய் நிற்பர். இதுபோல் சொல்ல முடியாத மிக அருமையான குணம் படைத்தவராய் இருப்பது நல்ல மாந்திரீகரின் இயல்பாகும்.

பொய் மாந்திரீகர் இலக்கணம்

ஒணங்காத மாந்திரீகர் உலகில் மெத்த
மகிதலமு மென்வசமே யென்று சொல்வார்
கணங்களெல்லாம் எந்தனுக்கு சித்தியென்பார்
கண்ணதில் கண்டோமே தெய்வ மென்பார்,
குணமான சக்கரத்தின் மாறல் எல்லாம்
குறிகண்டு மாறவல்லோம் என்று சொல்வார்,
இணங்காதே கோடி கோடி யுருவே செய்தோம்
என்றெல்லாம் எடுத்துரைப்பார் மட்டிமாடே. 15

நல்லமாந்திரீகரைக் காட்டிலும் பொய் மாந்திரீகர்கள் உலகில் அதிகம் உள்ளனர். இவர்களின் குணம் எப்படிப் பட்ட தென்றால் கூறுகிறேன் கேள்! ஈரேழு புவனங்களும் எனக்கு வசமாய் நிற்கிறது. மேலும் சகல பூதகணங்களும் என் சொல் படி கேட்கும். பூதங்களின் பதியான தெய்வத்தை என் கண்ணால் பார்த்துள்ளேன். அதுமட்டுமின்றி சக்கிரத்தின் ரகசியங்களும் அறிவோம் மேலும் ஒவ்வொரு மந்திரத்தையும் கோடிமுறை உருவேற்றியுள்ளோம் என்றெல்லாம் புனைந்து சொல்வார்.

மட்டியாம் நல்மரத்தின் வகையைக் காணார்
மதியத்தில் பேயோட்ட முன்பு போவார்,
நட்டளையாய்த் தூளிதமும் மிக மந்திரிப்பார்
நலங்கொண்டு செல்பவர்போ லபி நயங்காட்டி,

கட்டளையாய்த் தூளிதமும் மைகளும் சாந்தும்
கன கயாக குங்குமமும் அணிவா ரப்பா,
இட்டமாக அலகையது இல்லாள் மேலென்று
எடுத்துரைப்பார் ஜடாமுனி என்வசமென்பாரே. 16

முறையான மந்திரத்தை யறியாத இவர்கள் பகல் பொழுதில் பிசாசுகளை ஓட்டுதற்காக வருவார்கள். (ஏன்எனில், இரவில் இவர்களுக்கே பயமுண்டாகும்). வந்த இடத்தில்! ஜடாமுனியும்,பேயும், பிசாசும் இருப்பதாக கூறி விபூதியும், சாம்பிராணியும் மந்திரித்து தூவுவார்கள்! அதுமட்டுமின்றி விரட்டிய பேய் தன்னை அண்டாது இருக்க விபூதியும் மையும் குங்குமமும் அணிந்து கொண்டு மந்திரம் செபிப்பவரைப்போல் பாசாங்கு செய்வர். மேலும் பிசாசானது இந்த வீட்டிலுள்ள பெண் மீது இறங்கியுள்ளது. அதை அலகிடுதல் மூலம் அகற்றுதல் வேண்டும் என்பார். அப்படியும் தீரவில்லை என்றால் அதுமிக பயங்கரமான பிசாசாக இருக்கும். அப்பிசாசை என்னிடத்தில் வசமாகியுள்ள ஜடாமுனியின் மூலம் விரட்டுகிறேன் என்பார்!

வசமென்பா ருடையாள் மேலில்லை யென்பார்
வாய்க்கு வந்தபடி யெல்லாம் பழியே சொல்வார்.
நிசமான தேவதைகள் பிடித்த தென்பார்
நிசம்போல ஓட்டுவார்கள் தந்திரமாக,
நாசமடை விப்பார்கள் நல்ல பெண்ணை
நயமாகத் தானழைப்பார் லீலைக்கப்பா,
பூசைசெய் பவர்போலப் பெண்கள் தன்னைப்
புணருவார் கற்பழித்து விடுவார் தானே. 17

அப்படியும் போகவில்லை என்றால் அந்த பேயானது நீச தேவதையாகதான் இருக்கவேண்டும்! என்றுகூறி வாயில்வந்த கெட்டவார்த்தைகளை கூறி நிசமாக ஓட்டுவது போல் நடிப்பர், மேலும் பேய்பிடித்த பெண்ணை தன்னுடன் காமலீலைக்காக அழைத்து கெடுத்துவிடுவார்கள். இதுவே பொய் மாந்திரீகர்களின் லட்சணமாகும்.

தானான மெய் பொய்யாம் மாந்திரீகர் சொன்னேன்
தயவாக வதையறிந்து விலக்கு பொய்யை,
வானரமா முகத்தோனின் வசியஞ் சொன்னேன்
வன்மையுள்ள வது கடந்து மேலுங் கேளு,
கோனயனாம் பிரம்மனவன் வசியஞ் சொல்வேன்
குறிப்புடனே அறிந்தாக்கல் ஞானமாகும்,
மாணவனாம் நீ யறிந்து சித்தி செய்தால்
மண்ணி லுனக்கீடில்லை மடியாய் பாரே. 18

மெய்யான மாந்திரீகர் குணமும், பொய்யான மாந்திரீகர் குணமும் உனக்கு எடுத்துரைத்தேன். அதன்மூலம் பொய்யை விலக்குவாயாக! முன்பு விநாயகப் பெருமானின் வசியம் சொன்னேன். இனி பிரம்ம தேவனின் வசியத்தைக் கேள்! இம்மந்திரத்தை சித்தி செய்வதால் நீண்ட காலம் உயிர்வாழும் தன்மையானது உனக்குண்டாகும்! உலகில் உனக்கு இணை வேறு யாரும் கிடையாது.

பிரமன் ரூபம்

பாரப்பா பிரமன் முகன் நான்க தாச்சு
பகடில்லா அத்தமது அட்ட மாச்சு,
சோரப்பா வத்திரத்தின் நிறமோ வெண்மை
சதிரான வாகனமோ அன்னமாச்சு,
கூறப்பா ரஜதமே குணமே மாச்சு
குறிப்புள்ள காந்தியது கதிரோன் கோடி
ஆரப்பா அறிவார்கள் இவரின் மேன்மை
அன்னவரின் பத்தினியே வாணி யாச்சே. 19

முதலில் பிரம்மனின் ரூபத்தை அறிந்துகொள். பிரம்மதேவருக்கு முகம் நான்கதாகும். கைகள் எட்டாகும். நிறம் வெண்மை நிறமாகும். வாகனமானது அன்னப் பட்சியாகும். குணமானது ராஜஸமாகும். அவருடைய ஒளியானது கோடி சூரியனுக்கு சமமாக இருக்கும். அவரின் தர்மபத்தினியே சரஸ்வதியா வாள்!

ஆச்சப்பா பிரம்மனிட மந்திரத்தை கூறும் முன்னே!
அளவில்லா பிருதிவியின் பீஜங் கேளு!
பேச்சப்பா மிகவில்லா கூர்ந்து கேளு!
புகலுவேன் ஓங்காரம் முன்னே நாட்டே
காச்சப்பா லங்கெனவே லட்சமுரு நாட்ட
கடுமையுள்ள மண்கூறை செயிக்கலாச்சு
போச்சப்பா தூலத்தில் வியாதி யெல்லாம்
புதுமையுள்ள சதுருமுகன் மந்திரங்கேளே! 20

பெருமை வாய்ந்த பிரம்மதேவரின் மந்திரத்தை அறிந்து கொள்வதற்கு முன்பு ப்ருதிவியின் (மண்ணின்) பீஜமான ஓம்-லங் (ஓம்-லம்) என்ற மந்திரத்தை லட்சம் முறை செபித்தல்வேண்டும். இதனால் உடலில் உள்ள சகலவிதமான நோய்களும் நீங்கும். மண்ணால் எந்த கெடுதலும் உண்டாகாது. இதன் பிறகு பிரம்மதேவரின் மந்திரத்தை செபிக்கவேண்டும். அதைப் பற்றிக் கூறுகிறேன் கேள்!

பிரம்ம மந்திரம்

மந்திரமாம் ஓங்காரம் முன்னே நாட்டி
மகிமையுள்ள நமோ-பக-வ-தே என்றும்
மந்திரமாம்-சதுரு-முகனே என்றும்!
மங்கலிலா வேத-மாத்-தூரம ரூபா
மந்திரமாம்-இரணிய கர்ப்பா-தேவா
மட்டில்லா-பிரம்மாய சுவாகா-என்றே
மந்திரமாம் நூறா யிரமே உருவை செய்ய
மாற்றமிலா பிரம்ம ரவர் அருளுண்டாமே. 21

அதாவது ஓம்-நமோ-பகவதே சதுர்முகாய வேதாத்மனாய ஹிரண்யகர்பாய பிரம்மாய ஸ்வாஹா என்று லட்சம் முறை செபித்தால் பிரம்மதேவரின் அருளுண்டாகும்.

உண்டாகும் மேதை உரைக்க வாக்குமாய்
உண்டாகும் நாமம் உனக்கு முனியதாம்!
உண்டாகும் ஏற்றம் உண்மையில் ஞானமாய்
உண்டாகும் பாக்கியம் ஊட்டுவார் பிரம்மனே ! 22

பிரம்மாவின் மந்திரத்தை செபித்தால் மேதை என்ற புத்தி கூர்மையுண்டாகும். வாக்கில் வன்மையுண்டாகும். மேலும் பிரம்மாவின் மந்திரத்தை செபித்தால் முனிவன் என்ற பெயருண்டாகும். அதோடு சகல சௌபாக்கியமும் நம்மை வந்து சேரும்.

பிரம்மனின் மந்திரந்தான் பிசக்கிலா சித்தி செய்தால்
திரம்பல முண்டாகிட திண்ணமாய் வசிய மாடும்
உரமான மண்தன்னை உள்ளங்கை எடுத்து வைத்து
சரமான வாசிமூட்டி செபித்து கொடுக்கவே. 23

பிரம்மனின் மந்திரத்தை சித்திசெய்து கொண்டால் பல வகையான சித்துகள் விளையாடலாம். அதுமட்டுமின்றி மிகுந்த வசியமுண்டாகும். மண்ணை கையில் எடுத்துக் கொண்டு பிருதிவியின் பீஜத்தையும் பிரம்மனின் மந்திரத்தையும் மூச்சை சற்று நிறுத்தி செபித்து வேண்டியவர்க்கு கொடுத்தால்!

கொடுக்க உருவுதன்னை குறிப்பாய் ஏக தசம்
தடுக்காது பேய் பில்லி தகர்ந்தோடும் பார்க்கவே
எடுக்காது கர்மவினை ஏது உந்தனுக்கே ஐயா
அடுக்கவே நன்றாய் மந்திரமோதி சுலுவாக
தலைமாற பந்தனமாச்சே. 24

மந்திரத்தை பதினொறுமுறை செபித்து பேய்பிடித்தவர் மேல் தூவினால் பில்லிகளும் பேய்களும் பறந்து வோடும். மேலும் கர்மவினையால் வியாதி உண்டானால் மந்திரத்தை ஓத நீங்கலாகும். அதுமட்டுமின்றி பிரம்ம மந்திரத்தை கூறி

தலைசுற்றி சொடுக்கினால் திக்கு பந்தனமாகி எந்த செயலும் அண்டாது நிற்கும்!

பந்தமாக செய்து தூளிதத்தை
பகடில்லா தூவி அமரவே
செந்து சீவதேள் பூச்சி
செகந்தனிலே உன்னிடத்தி லணுகாது
கந்துகம் கற்பாறை சீவி
கசடறவே கோமிய மூட்டி
சந்து இல்லாது மஞ்சள்பூசி
சாற்றிட பூமேலே கந்தம் பூசே. 25

பிரம்ம மந்திரத்தை செபித்து விபூதி தூவிக் கொண்டு அந்த விபூதியின் மேலமர்ந்து கொண்டால் தேள்,பூச்சி போன்ற செந்துகள் உன்னிடத்தில் அணுகாது. மேலும், மலைப்பாறையை பந்துபோல் செதுக்கி அதை கோமயத்தில் மூழ்கவைத்து எடுத்து அதன்மேல் மஞ்சள் பூசி சாற்றி வாசனை திரவியம் தேய்த்து,

பூசிய பாறை தன்னை
பூசிக்க வனுதினமும் பூக்கொண்டு
வாசி யதை தானிறுத்தி
வகையாக மந்திரமோதி முன்ரூபம்
மாசிலா தொரு பழங்கனிகள்
அன்னமுடன் மதுரஞ் சுத்தி
தாசியனாக தரணியில் வைத்து
தூபதீபங் கொண்டு போற்ற. 26

வாசனை பூசிய பாறையை முறையாக அனுதினமும் சிரத்தையுடன் கனிகள்,அன்னம்,(சாதம்) நெய்,தேன் போன்றவைகள் வைத்து அபிஷேகம் செய்து தூபதீபங்

காட்டி முன்கூறிய மந்திரத்தை செபித்து பிரம்மனின் ரூபத்தை அதில் தியானம் செய்து போற்றினால்:

வேறு

போற்றுவது பிருதிவியின் பீஜமையா
புலுகில்லாரு லட்சமுரு செபித்துமே-முறையாக
மாற்றமிலா தொரு ஆண்மகனை
மைந்தனே யன்பதாகவே யன்னமிட்டு-நன்றாக!
சாற்றவே வவன் தனக்கு தட்சிணைகள்!
சதிராக ஆண்மகன் பிரம்ம குலம்-சாற்பு
ஏற்றமுளதே இந்த மந்திரமதை
எளிதாக நினையாதே மனஞ்சலியாதே -நகையாதே. 27

இந்த மந்திரங் கொண்டுபோற்ற வேண்டுமென்றால் ஓம் - லம் நம் : என்ற மந்திரத்தில் லட்சம் முறை செபம் செய்து போற்றி முடிவு நாளில் ஒரு பிராமண பிரம்மச்சாரிக்கு போஜனம் செய்வித்து தக்ஷிணையளித்தால் மந்திரம் பலிதமாகும். இதை பரிகாசத்துடன் பார்க்காதே! மகிமைவாய்ந்த மந்திரமிது!

வேறு

நகையா பூசை செய்ய
நல்ல பலன் காணும்
பகை உயிர் சீவமுதல்
பக்குவம் பார் வசியமுமாம்
சிகை யலங்கார பெண்மோகம்
சிந்திக்கா விடுதல் மேல்
மிகை ஞான சித்துண்டு
மில்லாது பலனனித்தங் கூற. 28

நான் கூறிய பிரம்ம மந்திரத்தையும். பீஜத்தையும் செபிப்பதால் சித்திகளுண்டாகும். பூமியிலுள்ள உயிர்க

ளனைத்தும் வசியமாகும். பகை இருக்காது. பெண்கள் மோகங்கொண்டு வசியமாவார். அதை கவனியாது நின்றால் யோகமும் ஞானமும் சித்தியாகும், இதன் பலனைப் பற்றி இதற்கு மேல் கூறுவது மிகையாகும்.

விஷ்ணுவின் ரூபம்

கூறுவேன் மாலவனின் மந்திர பீஜம்
மகிமையுடன் தியான முதல் ரூபங் கேளு!
வீரமுள்ள சிரசப்பா ஏகஞ் சொன்னேன்
விளக்க முள்ள அத்தமது சதுரமாகும்
சேரவே கபில நிறம் மஞ்சளாடை
செங்கண்ணுஞ் செவ்வாயுஞ் சுருட்டை ரோமம்
பார்க்கவே கருடனது வாகன மாச்சு.
பகடில்லா சத்துவமே குணமு மென்னே ! 29

இனி திருமாலின் மந்திரம், பீஜம், தியான ரூபன் போன்றவைகளை கூறுகிறேன் கேள்! இவனுக்கு சிரசு ஒன்று, கைகள் நான்கு, நிறம் கருப்பு, ஆடை மஞ்சள், கண்ணின் நிறமும் உதடின் நிறமும் சிகப்பு, ரோமம் சுருட்டை, வாகனம் கருடன், குணம் சத்துவம்.

எண்ணுவது லக்குமியே இவனின் சத்தி
எழிலான வங் என்ற பீஜமதை முந்திநாட்டு
பின்னியே செம்பான குடுவை தன்னில்
பிழையில்லா அப்புவதை பூரிப்பாயே
சொன்னதொரு கற்பாறை உருண்டைதன்னை
செயகோஷம் செய்துமே தீர்த்தமாட்டி
பின்னமிலா வத்திரத்தால் துடைத்துப்போட்டு
பிசகில்லா தூபமுதல் தீபங் காட்டே. 30

இந்த விஷ்ணுவின் சக்திக்கு லக்ஷ்மி என்று பெயர்! விஷ்ணுவின் மந்திரத்தை செபிப்பதற்கு முன்னதாக அப்பு பீஜமான ஓம்-வம்- என்று லட்சமுரு செபிக்க வேண்டும். பிறகு, ஒரு செம்புப் பாத்திரத்தில் (செம்பு) நீரை விட்டு நிரப்பி அந்நீரை முன் பீஜத்தால் செபித்து முன்பு செய்து வைத்துள்ள கற்பாறை உருண்டையின் மேல் விட்டு ஸ்நானம் செய்வித்து நல்ல துணியால் துடைத்து அந்த உருண்டைக்கு தீபதூபங் காட்ட வேண்டும்!

காட்டியே ஹ்ரி ரூபந் தன்னைப் போற்றி
கண்மணியே ஓங்காரம் முன்னே கூறி
மாட்டிடாய்-சதுர்-புசாய-சிங்க ரூபாய
மகிமையுள்ள-திரிநேத்திராய -சக்ர அத்தாய,
சாட்டிடாய் விட்டுணுவே சுவாகா என்று
சலிக்காமல் லட்சமுரு செபித்துப் போற்றி,
போட்டிடாய் அன்னதானந் தர்ப்பணங்கள்,
பொய்யில்லா வோம முதல் செய்திடாயே! 31

தீபம் காட்டிய அந்த கற்பந்து பாறையில் (பிரம்மனை தியானம் செய்த அதே கல்லில்) விஷ்ணுவின் ரூபத்தை தியானம் செய்து போற்றி, ஓம்-சதுர்புஜாய, சிங்கரூபாய திரிநேத்ராய-சக்ர அஸ்தாய விஷ்ணுவே ஸ்வாஹா! ! என்று லட்சம் முறை செபம் செய்து அன்னதானமும் தர்ப்பணமும், ஓமமும் செய்தல் வேண்டும்!

செய்திட்டால் உலகத்தில் எண்ணஞ் சித்தி!
செயலக்குமி உன்னிடத்தில் வாசஞ் செய்வாள்
வெய்யாமல் மனங்கொண்டு அனுதினமோதி
வெகுவான பேய்பில்லி எரிப்பு தன்பேரில்
வைய்யாமல் அத்தமதில் அப்பு வாங்கி
வகையான அதன் பீசங் கூறித் தூவ

கொய்தடுதாரு தலைபோல பேய்களெல்லாம்
கதறியே ஓடுமடா புதுமை பாரே! 32

முறையாக ஓமம் செய்வதால் சதாகாலமும் லக்ஷ்மி உன்னிடத்தில் வாசம் செய்வாள். மேலும் தினமும் மந்திரத்தை ஓதுவதால் மேன்மையுண்டாகும். அது மட்டுமின்றி வலது கையில் நீரை எடுத்து ஓம்-வம்-என்று செபித்து பிறகு விஷ்ணுவின் மந்திரத்தை செபித்துப் பேய்பிடித்தவர் பேரிலும், பில்லியால் அவதிப்படுபவரின் பேரிலும் ஓமம் உள்ள இடத்திலும் தெளித்தால் பேய்களும், பில்லிசூன்யங்களும் கதறியோடும்!

புதுமை யுள்ள விட்டுணுவின் மந்திரத்தால்
பூவுலகில் மாந்தர் சிசு திர்யக்கு யோனி
முதுமையுள்ள செனங்களுடன் தேவர் யட்சர்
முக்கியமாம் கின்னருடன் கந்தருவப் சரசு
பதுமைபோற் கைகட்டி வாய்கட்டி நிற்பாரையா
பத்திகொண்டு ஓதியதால் வந்த மேன்மை
சதுரமாம் முத்தியதில் கடையில் ஒன்று
சத்தியமே ப்ருகுவின் நூலின் மேன்மை. 33

மேலும் விஷ்ணுவின் மந்திரத்தால், பெண்கள், பாலர் ஆண்கள், பசு, பட்சி,பூச்சி, தேவர்,யக்ஷர், கின்னர், கந்தருவர், அப்சரஸ் போன்ற அனைவரும் வசிய மாவார்கள். அவர்கள் நம் சொல்கேட்டு காரியம் செய்துமுடிப்பர். இவையாவும் பக்தியுடன் மந்திரத்தை செபிப்பதால் ஏற்படும் சித்தியாகும். மேலும் நான்கு வகையான முக்திகளில் கடைசியான சாயுஜ்யம் என்ற முக்தியுண்டாகும். இவையாவும் ப்ருகுவான என்நூலின் மகிமையால் தான் என்று அறிந்து கொள்!

மேன்மையாம் ஆதியிலே யிருந்த மூர்த்தி
மங்கலிலா கோடியே சூரி சேர்ந்த
ஆண்மையாம் ஒளிபெற்று இருந்தபோது
அவருட சோத்திர மலத்திற் தோன்றி!
தன்மையிலா மதங்கொண்டு திரிந்தபோது,
தாமரை நாயகனை கண்டார் பாரு
வெண்மையாம் மலரமர்ந்த மூர்த்தி கேளும்
விடம்விட் டோடியே அகன்று போவீர்! 34

ஆதியில் இந்த விஷ்ணு என்ற மூர்த்தியே கோடிசூர்ய பிரகாசத்துடன் இருந்தார். அப்போது அவருடைய காது அழுக்கினின்று இரு அசுரர்கள் தோன்றினர். அந்த இருவரும் தன்மையில்லாத குணங்கொண்டவராய் வியாபித்து நின்றபோது வெண்தாமரையில் இருந்த பிரம்ம தேவரைக் கண்டனர். இருவரும் ஏ! பிரம்மதேவனே! இந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விடும் (வெண் தாமரை ஆசனத்தை விட்டு ஓடிப்போவீர் என்றனர்).

போவீ ரானாக்கால் நன்மை மெத்த
பொல்லாத சிருட்டி முதல் தேவர் மட்டும்
மாவீ ரரிருவரே நாங்களென்றறிவீர்
மதீதமாம் தவமேன்மை கேள்வி யுண்டு,
சாவீ ரானாக்கால் போக வேண்டா,
சலியாமல் ரணகளம் வந்து சேரும்
பாவீ யாம் இருவருமே வார்த்தை சொல்ல,
பண்புள்ள பிரம்மதேவர் மறைந்தார் காணே! 35

இவ்விடம் விட்டு நீர் அகன்று போனால் உமக்கு நன்மையுண்டாகும். ஏன் எனில் பூச்சி புழு முதல் தேவர்கள் வரை எவரும் எங்களைப் போன்ற பலசாலிகள் அல்லர்! அதுமட்டுமின்றி கல்வி கேள்விகளிலும், ஞானத்திலும், தவ

வலிமைகளிலும், நாங்களே உயர்ந்தவர்கள். இவ்வளவு கூறிய பின்னரும் நீங்கள் இவ்விடம் விட்டுச் செல்லவில்லை எனில் எங்கள் கையால் மடிவதுதிண்ணம் என்றனர். அதைக் கேட்ட பிரம்மதேவர் உடனே மறைந்து போனார்.

காணவே இருபேர்கள் ஆய்ந்து பார்க்க,
கார்மேகன் வாழுமிடம் வந்தார் பாரு
தோணவே புருடனே யோக ரூபா
துடியான விட்டுணுவே இங்கே பாரும்
பூணவே போர் வேடம் தரித்த வீரன்!
பொய்யிலா மதுவென்ற அசுரன் மூத்தான்
மூணவே கைடபனே சிறியோனாவான்!
மூதுலகில் தொல்லை யெனக்கிவர் தான் பாரீர்! 36

மறைந்த பிரம்மதேவரை இருவரும் தேடிப்பார்க்கும் பொழுது பிரம்மதேவரானவர் வைகுண்டம் சென்று புருஷா விஷ்ணுவே, யோகேசுவரா! என்னை காத்தருள்வீர்! போர்வேடம் கொண்ட மது கைடபன் என்ற அசுரர்கள் எனக்கு பலவகையான துன்பங்கள் அளித்து சிருஷ்டியை தடை செய்கின்றர். ஆகவே இவர்களிடமிருந்து என்னை காப்பாற்றும் என்றார்!

பாருமென்ற சொல்கேட்ட பரந்தாமன் தானும்!
படையான சுதரிசனம் தன்னைக் கொண்டு
வாருமென் றழைத்துமே வஞ்சகமாய் தானும்!
வாட்டமிலா திருவரையும் வதைத்துப் போட்டார்!
காரு மென்ற சொல் கேட்டு வதைத்த தேவா.
காரிருளாம் அஞ்ஞானம் தன்னை யுண்டு
கோருகின்ற வரந்தன்னை அளித்து மேலும்
கோதுவீர் ஞானமென்ற சொல்லைத்தானே ! 37

இதை கேட்ட பரந்தாமன் சுதரிசனம் என்ற தன்னுடைய ஆயுதத்தால் வஞ்சகமாக அசுரர்களை வீழ்த்திக் கொன்றார். இந்த செயலைக் கண்ணுற்ற பிரம்மதேவர் விஷ்ணுவான தேவா! என்னுடைய கவலை தீர்த்தவரே எனக்கு ஞானத்தை போதித்து மாயையிலிருந்து என்னை ஆட்கொள்வீர் என்றார்!

சொல்லு மென்ற கோனவனின் வார்த்தை கேட்டு,
செகந்நாதன் ஞானத்தை போதித்தாரையா,
வெல்லுதற்கு கோனவனாம் பிரம்மதேவர்!
வகையாக எந்தனுக் குரைத்தார் பாரு,
பொல்லாத மாயை யென்ற இருளைத் தானும்!
புறங்காட்டி யோடிடவே எடுத்துச் சொல்வேன்!
கொல்லாத காமமுடன் மோகங் கோபங்
கொள்கை யிலா உயர்ந்திடவே நரகமாச்சே! 38

அதைக்கேட்ட செகந்நாதரான விஷ்ணு பிரம்ம தேவருக்கு ஞானத்தைப் போதித்தார்! அந்த ஞானத்தை பிரம்மா எனக்கு சொன்னார். நான் சீடனான உனக்கு அதை சொல்கிறேன் கேள்! காமமும், கோபமும் மிகுந்த போகமும் மனிதனை நரகத்தில் கொண்டுபோய் சேர்க்கும்!

ஆச்சப்பா இதைவென்றால் ஞானங் கூடும்!
அல்லாட்டால் தேறுதற்கு ஏது மார்க்கங்
காச்சப்பா கோபத்தை ஞானத் தீயால்!
கண்மணியே என்போலே யார்தான் சொல்வார்!
போச்சப்பா பிறவிதான் ஞானம் நின்றால்!
பொல்லாத பிறப்பிறப்பு மழிந்து போகும்!
பாச்சப்பா மனந் தன்னை மந்திரத்தில்
பகடில்லா சித்திபெற்றால் தெளிவுண்டாமே! 39

காமத்தையும், கோபத்தையும் வென்றால் ஞானமுண்டாகும். ஞானம் பெற்றால் பிறப்பும், இறப்பும் அகலும், ஆகவே, காமத்தையும், கோபத்தையும் ஞானம் என்ற தீயால் சுட்டு அழித்துவிடு. மனதிலிருந்து எவ்வாறு காமத்தையும் கோபத்தையும் அழிப்பது என்று நீ கேட்பாயாகில் அதற்கு மந்திர முறைகளை கூறுகிறேன் கேள்! அதன்மூலம் நீ சித்தியடையலாம்!

உண்டாகுங் காயத்தில் ஒளிதானப்பா
உருவான மந்திரத்தை கண்டுபாரு
ரெண்டாகுங் கர்மவினை சூன்ய மோமல்
அடங்காத பிசாசுகளுந் தேவதை யோடுங்
கண்டதொரு மந்திரத்தி னுண்மையெல்லாங்
கசடறவே நூல் தனிலே நிகழ்த்தினோம் யாம்
விண்டதொரு மந்திரத்தை உருவேசெய்தால்
வெட்டவெளி யாகுமடா வேதாந்தம் பாரே! 40

சித்திமட்டுமில்லாது சரீரத்தில் திவ்வியமான ஒருவித ஒளியுமுண்டாகும். கர்மவில்னைகளும், சூன்யம், ஏவல், பிசாசு, துர்தேவதைகள் போன்ற யாவும் மந்திரத்தை செபித்த மாத்திரத்தில் விலகிப் போகும். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மந்திரத்தை இங்கு சொல்லியுள்ளேன். இதன்படி செய்தால் வேதாந்தப் பொருளானது நம் முன் தோன்றிப் பிரகாசிக்கும்!

பாரப்பா அகாரத்தை முந்தி நாட்டு
பகடில்லை ஆகாரம் பின்னே நாட்ட
சேரப்பா இகாரத்தை செபிப்பாய் பின்னே
செயமான ஈ காரம் உ காரம் கேளு

மாரப்பா ஊ-எ-ஏ-ஐ-ஓ- என்று
மகிமையுள்ள ஔம் தனிலே முடித்துப்போடு
காரப்பா பீசமிவை பதினொன் றாகும்
கண்மணியே யிதைக்கடந்து மெய்யை நோக்கே. 41

சீடனே முதலில்-'அம்' என்று செபம் செய்து-பிறகு ஆம், என்றும், இம்ஈம்உம், ஊம், எம்ஏம்ஐம்ஓம்ஔம் என்றும் பதினொரு வகையான உயிர்பீசங்களை தனித்தனி யாக செபம் செய்தல் வேண்டும். பிறகு மெய் பீசங்களை செபிக்கவேண்டும். இதன் முறையை சொல்கிறேன் கேள்!

நோக்கவே ககாரமது ஆதி யாகும்
நெருங்காத ங-காரமது மடுத்து சொல்லு
பாக்கவே ச காரமே பிந்தி நாட்டு
பக்குவமாய் ஞ-ட-ண-த- என்னுங்
கோக்கவே ந-ப-ம-ய-ர-வாகும்
குறிப்புடனே ல-வ-ஸ-ஷ-க்ஷ
தாக்கவே ஜ-ஹ-க்ஷ அஹ வென்றோத
தப்பாது மெய்பீசம் இருபதுஞ் சித்தி. 42

முதலில்-கங் என்று செபம்செய்து பிறகு ஙங், சங், ஞங், டங், ணங், தங், நங், பங், மங், யங், ரங், லங், வங், ஸங், ஷங், ஜங், ஹங், க்ஷங், அஹம் என்று தனித்தனியாக இருபது பீசங்களை செபித்தல் வேண்டும். இதனால் சகலமுஞ் சித்தியாகும்!

சித்தியாம் பீசத்தின் முந்தியையா
செயமான ஓங்காரம் நாட்ட வேணும்
பத்தியே அந்தமதில் நமவென்றோது
பதறாமல் தனித்தனி லக்கமுருவப்பா
சுத்தியே செய்வதனால் ஏது நன்மை
கசடகற்றி மானதமாஞ் செபிக்கமேன்மை
முத்தியாம் பாதையது திறந்து காட்டும்
முழுமனதாய் ங காரம் ம காரம் அந்தம் வையே. 43

பீசங்களை செபிக்கும் முன் சில முறைகளை கவனிக்க வேண்டும் சீடனே. அதாவது ஒவ்வொரு பீஜத்தின் முன்பும்-ஓம் என்றும் கடைசியில் நம: (நமஹ) என்றும் சேர்த்து செபிக்க வேண்டும். அது மட்டுமல்லாது மந்திரங்களை உரத்த குரலில் செபிக்காமல் மனதிலேயே (மானதமாய்) கூறிக் கொண்டு செபிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் முத்தியுண்டாகும்! இன்னுங் கேள்! பீசத்தின் பக்கத்தில் ங்-என்றோ,ம் என்றோ சேர்த்து செபிக்க வேண்டும். (உதாரணம்: (1) ஓம் அம் நம: (2) ஓம் அங் நம:) செபிக்கும் எண்ணிக்கை யானது ஒவ்வொரு பீசங்களும் தனித்தனியே லட்சம் முறையாகும்!

வைப்பதுவால் சித்தி முத்தி ரெண்டுமாகும்
        வகையான மகார மந்தம் சித்தி காட்டும்
கைப்பொருளாம் ஙகார மந்தம் முத்தியையா
        கசடில்லை என்வாக்கில் கூர்ந்து நோக்க
சையோகம் நீக்கியே செபிக்க மேன்மை
        செயமாகும் அறுபத்து நாலுஞ் சித்தி
மைவிழி மாதர் கை ஆகா தென்று
        மாலன்று பிரம்மனுக்கு மொழிந்தார் காணே! 44

ங்-ம்-என்ற பீசத்தின் கடைசியில் சேர்ப்பதால் சித்தியும் முக்தியும் உண்டாகும். பீசத்தின் கடைசியில் "ம்" என்று சேர்த்து செபித்தால் சித்திகள் உண்டாகும். "ங்" என்று சேர்த்து செபித்தால் முக்தி உண்டாகும். ஆனால் சையோகம் நீக்கவேண்டும். மைவிழியாள் போகத்தை நிறுத்தி பீசங்களை செபம் செய்தால் அறுபத்துநான்கு வகையான சித்தியுமுண்டாகும். (பெண்போகத்தை விலக்க வேண்டுமென்று திருமாலானவர் பிரம்மாவுக்கு உபதேசம் செய்தார்.) உதாரணமாக "அ" என்ற பீசத்துடன் ஓம் என்று

முன்னே கூறிய பின் (ங்) என்ற அந்தத்தை சேர்த்து ஓம்-அங், நமஹ என்று செபித்தால் முக்தி வழியான ஞானத்தையளிக்கும். இவ்வாறின்றி ஓம்-அம்-நமஹ என்றும் (ம்) காரத்தை சேர்த்து செபித்தால் சித்திகளையளிக்கும் (சித்துவிளையாடுந் தன்மையை அளிக்கும்) என்பதேயாகும்! (இந்த முறையில் எல்லா பீஜங்களுடனும் ங் என்றும் ம் என்றும் சேர்த்து தனித்தனியாக லட்சம் முறை செபிக்க வேண்டும்!

காணவே அம் மென்று செபித்தால் மைந்தா
காலனா மிருத்துவை செயிக்கலாகும்
பூணவே ஆமென்று உருவே செய்ய
புகழுள்ள ஆகர்ஷணம் சித்தியாகும்
மூணவே இம்மென்று கூற மைந்தா
உண்மையாங் காயத்திற்கு புஷ்டி சொன்னேன்
வாணவே ஈமென்று செபந்தான் பண்ண
வாக்கினியி னனுக்கிரகம் வருகுமென்னே. 45

"ஓம்-அம்-நமஹ" என்று செபம் செய்தால் மரணத்தை வெல்லலாம், "ஓம் ஆம் நமஹ" என்று செபம் செய்தால் நினைத்ததை வரவழைக்கும் ஆகர்ஷணத்தொழில் சித்தியாகும். "ஓம் இம்-நமஹ" என்று செபித்தால் உடலுக்கு புஷ்டியுண்டாகும்! ஓம் ஈம் நமஹ என்று செபித்தால் சரஸ்வதியின் கடாட்சம் ஏற்படும்.

என்னவே உம்மென்று செபத்தைச் செய்ய
எழுங்காத பலன்தன்னை யளிக்கு மையா
சொன்னதோர் ஊம்மென்ற பீசந்தன்னை
செபிக்கவே உச்சா டனமே செய்யும்
பின்னமிலா எம்மென்று உருவுகூற
பிசகில்லா சத்துவ குணம் வருகும் பாரு
கன்னமே வையாமல் ஏம்மென்று சொல்ல
காசினியி லெல்லாமே வசியமாச்சே. 46

"ஓம் உம் நம ஹ"என்று செபித்தால் சகலதொழிலுக்கும் பலமுண்டாகும் : ஓம் ஊம் நமஹ என்று செபித்தால் உச்சாடன தொழில்சித்தியாகும் ! "ஓம் எம் நம ஹ" என்று செபஞ் செய்தால் சத்வ குணம் உண்டாகும். "ஓம் ஏம் நமஹ" என்று செபஞ்செய்தால் சர்வமும் வசியமாகும்.

ஆச்சப்பா புருடர்களை வசியஞ் செய்ய
ஐம்மென்று அடக்கமாய் செபித்துப்பாரு
பேச்சப்பா ஓம்என்றால் வாக்குச் சித்தி
பிசகில்லா ஔம் என்றால் வாக்கு ரூபங்
காச்சப்பா கம்என்றால் தடைகள் போகும்
கண்மணியே ஙம் என்றால் உக்ரமாச்சு
போச்சப்பா சம்என்றால் அப்பிச்சாரம்
போக்கிய மாஞ் சகலசென வசியமுண்டே. 47

ஆண்களை வசியஞ் செய்யவேண்டுமானால் "ஐம்" என்று செபிக்க வேண்டும், "ஓம்" ஒன்று செபித்தால் வாக்கு பலித சித்தியுண்டாகும் ! "ஔம்" என்று செபித்தால் வாக்கில் ஒளியுண்டாகும்! "கம்" என்று செபித்தால் தடைகள் விலகும், "ஙம்" என்று செபித்தால் உக்ரரூபம் உண்டாகும் (ஆவேசம் வரவழைக்கலாம்). "சம்" என்று செபம் செய்தால் சர்வ ஜனவசிய முண்டாகும்!

உண்டாகும் மாரணத்தை ஞகாரம் போக்கும்
உண்மையுள்ள டகாரமது வியாதி போக்குஞ்
தண்டமாம் விஷத்துக்கு ஆதியாச்சு
தப்பில்லை ணகாரமது மோகிக்கு மையா
பிண்டமாம் தானியமுந் தனங்கள் மிஞ்ச
பிசகாமல் தம்என்று செபித்து போடு
நண்டிடவே நகாரமென்ற பீசந்தன்னை
நிச்சயமாந் தம்பனமே என்று சாற்றே. 48

"ஓம்" என்று செபித்தால் மரணத்தை வெல்லலாம். வேண்டும் வியாதிகளை விலக்க "டம்" என்று செபிக்க வேண்டும். மேலும் இதே பீசம் விஷத்தையும் போக்கும்! "ணம்" என்று செபம் செய்தால் மற்றவர்களை நம்மீது மோகம் உண்டாகும்படி செய்யும் தனமும், தான்யமும் விருத்தியாக "தம்" என்று செபிக்கவேண்டும் "நம்" என்று செபித்தால் சர்வ தம்பனமும் உண்டாகும்! (சர்வமும் தம்பிக்கும்.)

சாற்றவே பம்என்றால் பூதம் போகுஞ்
சத்தியமாய் மகாரத்தால் சத்துருமோகம்
போற்றவே யகாரத்தில் யெங்கும்போக
புகையுடனே அக்கினியா ரம்என்றோ
மாற்றமிலா லகாரத்தா லோக ரக்ஷம்.
மட்டில்லா வகாரத்தால் வியாபாரஞ் சித்தி
ஏற்றமாம் ஆலபலம் "ஸ" காரத்தால்
எழிலான ஷ காரத்தால் அர்த்தமுதலாமே. 49

"பம்" என்று செபம் செய்தால் பூதம், பேய் பிசாசுகள் போகும், "மம்" என்று செபிக்க சத்துரு வசியமாவான் "யம்" என்ற மந்திரத்தால் எங்கும் தடையில்லா சஞ்சாரம் செய்யலாம். "ரம்" என்று செபிக்க நெருப் புண்டாகும் (அக்கினியை படைக்கலாம்) "லம்" என்று செபித்தால் பூமியை செயித்து காப்பாற்றலாம். "வம்" என்று செபித்தபால் வியாபாரஞ் சித்தியாகும் (வசிய முண்டாகும்), "ஸம்" என்று செபித்தால் சகலவிதமான பலனும் உண்டாகும். "ஷம்" என்று செபித்தால் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம், என்ற நான்கும் கைகூடும்.


ஆகுமே ஜம்என்றால் தேவதை யோடும்
ஹம் என்ற எழுத்துக்கு ஹம்ஸ ரூபம்
சாகுமே தத்துவங்கள் க்ஷகாரத்தை கூற
சபிக்காது இம்முறை கண்ட பேர்க்கு,

ஏகுமே துன்பங்கள் வியாதி பீடை
எடுத்துரைத்த பில்லி முதல் வைப்பு ஓமல்
போகுமே பொடிபட்டு தூசு போல
பொன்மயமாந் தேக மது ஆகும் பாரே. 50

"ஜம்" என்று செபித்தால் துர்தேவதைகள் விலகும்! "ஹம்" என்றால் பரம்பொருளின் ரூபந் தோன்றும்! "க்ஷம்" என்று செபித்தால் தத்வ சரீர மழிந்து போகும். இதனால் மோக்ஷ முண்டாகும். மேலும் முறையாக இதை செபித்தால் பில்லி, ஓமல், வைப்பு, பீடை போன்றவையாவும் பொடிபட்டு தூசுபோல் பறக்கும். தேகமானது தங்கம் போல் மின்னும்!

பாரப்பா உயிர்மெய்பீசம் முன்னே
புகன்றிடுவேன் சக்கிர மாண்பு கேளு!
ஆரப்பா அறிவார்கள் இந்த சூட்சம்
அறிவிப்பேனான் மைந்தா அன்பாய்க் கேளு
கீரப்பா முக்கோணம் பிந்து வுள்ளே
கிருபை யுள்ள வளையமேல் துட்டிக் கொண்டு
மாரப்பா விதழ் நான்கு அதன் மேல்வட்டம்
மகிமையுள்ள சதுரமது மேலே தாக்கே. 51


உயிர்மெய் பீசங்களை செபிக்கும் முன்பு அதனுடைய சக்கிரமுறையைக் கூறுகிறேன் கேள். இந்த சக்கர முறையை இதுவரை யாருமே அறிந்திருக்க மாட்டார்கள். அதாவது, முதலில் ஒரு முக்கோணம் வரைந்து கொண்டு அதன் இடையில் ஒரு பிந்து இட்டு, பிறகு முக்கோணத்தின் மேல் ஒரு வட்டமும் வட்டத்தின்மேல் நான்கு இதழும் நான்கு இதழின் மேல் ஒரு வட்டமும் அந்த வட்டத்தின் மேல் ஒரு சதுரமும் கீறவேண்டும்!



எதிர் பக்கத்தில் இருக்கும் படத்தில் முக்கோணத்திற்கு ள் இருக்கும் வட்டத்திற்குள் உள்ள பகுதி பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது.

தாக்குவா யதன் மேலிதழோ வாறு
தப்பாம லதன் மேலே வளையமொன்று!
தாக்குவா யதன்மேல் பிறையுமொன்று
தப்பாம லதன்மேல் வளையமொன்று

தாக்குவா யதன்மேலே யிதழும் பத்து
 தப்பாம லதன்மேல் வளையமொன்று
தாக்குவா யதன்மேலே கோணமொன்று
 தப்பாம லிதழதுவும் பன்னீர் சூடே. 52



சதுரத்தின் மேல் ஒரு வட்டமும் வட்டத்தின்மேல் ஆறு இதழ்களும் அதன் மேல் ஒரு வட்டமும் வட்டத்தின் மேல் ஒரு பிறையும், பிறையின்மேல் ஒரு வட்டமும் வட்டத்தின் மேல் பத்து இதழும், இதழின்மேல் மீண்டும் ஒரு வட்டம் வரைந்து அந்த வட்டத்தின்மேல் ஒரு முக்கோணமும்

முக்கோணத்தின்மேல் வளையம் ஒன்று கீறி அதன்மேல் பன்னிரெண்டு இதழ் கீறவேண்டும்!

சூடுவா யிதன்மேலே வளையந்தன்னை
சுறுக்காக வளையம்மேல் அறுகோணந்தான்!
போடுவாய் கோணமேல் வளையந்தன்னை
புறம்பாக விதழதுவும் யீரெட்டுத்தான்
சாடாமல் அதன் மேலே வட்டமொன்று
சதிராக அரைவட்டந் தாக்கு மேலே
வாடாத மலர் தன்னை யீருதாக்கி
வழக்கமாங் கணவளையந் தாக்கு வாயே! 53

பன்னிரண்டு இதழின்மேல் ஒரு வட்டமும் வரைந்து அந்த வட்டத்தின்மேல் அறுகோணமும் அந்த அறு கோணத்தின் மேல் ஒரு வட்டந் தாக்க வேண்டும். தாக்கிய அவ்வட்டத்தின் மேல் பதினாறு இதழ்கள் வரைந்து அந்த இதழ்களின் மேல் பதினாறு இதழ்கள் வரைந்து அந்த வட்டதின்மேல் ஒரு பிறையைக் கீறி அந்த பிறையின் மேல் ஒரு வட்டம் வரைந்து அவ்வட்டத்தின்மேல் இரண்டு இதழ் கமலம் வரைந்து அதன் மேல் ஒரு வட்டமும் வரைய வேண்டும் !

வாயே நீ யிதன்மேலே யிதழைக் கேளு
வகையாக சோடசமுமே யீரு மாகும்
காயே நீ யிதழதுவில் சூனிய மிட்டு
கைமுறையாய் அட்சரத்தின் மாண்புகேளு
சேயே நீ கீழ்முகத்தில் ஓங்காரம் நாட்டி
செயலாக வதன்பின்னே ஸ்ரீங்காரந்தான்
மாயே இரீம்-ஐயுங்-கிலியுஞ் சௌவும்
மறைய நமோ ப-க-வ-தே மேலும். 54

வரைந்த வட்டத்தின்மேல் முப்பத்திரெண்டு இதழ்கள் கீறி அந்த இதழ்களில் பிந்து வரைந்து அந்த பிந்துவின் கீழ் அட்சரங்கள் எழுதவேண்டும் அட்சரங்களாவது என்னவென்றால் - ஓம் - ஸ்ரீம்- இரீம் - ஐயுங் - கிலியும்- சௌவும்- நமோ ப-க-வ-தே என்றும் பிறகு !

மேலுமே அ-க்ஷ-ர-பி-ரம்-மா-ய
மைந்தனே வித்-யா-ரா-சா-ய-வென்று
காலுமே கடையிலே சுவாகா கூட்டி
கசடறவே நோக்கினால் மந்திரமாச்சு
கோலமே யுள்ளிரண்டு இதழே தன்னில்!
குறிப்புடனே ஹ-க்ஷ-வென்றுமாட்டி
சாலவே அகாரத்தின் அடியைத் தொட்டு
சத்தியமாய் அஹம்அந்தங் கொண்டு மாட்டு 55

அ-க்ஷ-ர-பி-ரம்-மா-ய-வித்-யா-ரா-சா-ய சுவாகா என்று முப்பத்திரெண்டு இதழ்களில் எழுதி பிறகு இரண்டிதழ் கமலங் கொண்ட உள்இதழில் ஹ-க்ஷ என்ற அட்சரத்தையும், அ, ஆ, இ, ஈ, உ, ஊ ர்ரு- ர்ரூ- ர்லு- ர்லூ- ஏ- ஐ- ஓ- ஔ- அம்- அஹ என்ற பதினாறு எழுத்துக்களையும் பதினாறு இதழ்களில் எழுத வேண்டும்.

மாட்டுவது சோடசத்தின் தளத்திலப்பா
மகிமையுள்ள துவாதசத்தின் கமலங் கேளு
காட்டுவேன் க முதலாங் டகார மந்தம்
கண்மணியே ட கார மேல் ப காரமட்டும்
போட்டிடுவாய்த் தசத்தினுட கமலந் தன்னில்
பொய்யில்லா சட்கமலந் தன்னில் மைந்தா
மாட்டிடுவாய் ப காரமேல் ல கார மந்தம்
மைந்தனே சதுர்கமலம் சேரத் தாக்கே ! 56

பதினாறு இதழ்களில் எழுதின பிறகு க^{2} -க- க^{3} க^{4} - ஙச^{2} -ச ஜ^{3} -ஜ^{4} -ஞ-ட-ட^{2} என்ற பன்னிரண்டு அக்ஷரங்களை பன்னிரண்டு இதழ்களிலும் ட^{3}- ட^{4} ண-த-த^{2}-த^{3}-த^{4}-ந- ப- ப^{2} என்ற பத்து அக்ஷரத்தை பத்து இதழ் கமலத்திலும்! ப^{3}-ப4 ம-ய-ர-ல என்ற ஆறு அக்ஷரத்தை ஆறு இதழ் கமலத்திலும், மிஞ்சிய எழுத்துக்களை நான்கு இதழ் கமலத்திலும் எழுதவேண்டும். (அவை -வ-ச-ஷ-ஸ என்பதேயாகும்!)

தாக்குவாய் ஓங்காரங் கோணமுள்ளே
தயவான பிருதிவியே நமோ வென்று
தாக்குவாய் சதுரமென்ற யிடையில் மைந்தா.
தப்பில்லா ஆபவே நமோ வென்று
தாக்குவாய் பிறையான விட்டந் தன்னில்!
தகிப்பான அக்கினியே நமோவென்று
தாக்குவாய் முக்கோண மிடையில் மைந்தா
தாபிப்பாய் வாயுவே நமோவென்று. 57

பிறகு இடையில் உள்ள முக்கோணத்தின் மத்தியில் "ஓம்" என்றும், சதுரத்தில் "பிருதிவியே நமோ" என்றும், பிறையில், ஆபவே நமோ என்றும், முக்கோணத்தில் அக்கினியே நமோ வென்றும், வாயுவே நமோ என்றும் எழுதுவாயாக.

என்றுமே அரைவிட்ட உச்சித்தாக்கு
எடுத்துரைத்த சக்கிரமே சாகரமாச்சு.
வென்றுமே வாழ்வதற்கு செயலுமாச்சு
வகையான சிருட்டி சம்மார மாச்சு.
கொன்றுவிடும் பிரம்ம மென்ற தீயுமாச்சு
கொள்கையுள்ள அட்சரங்கள் சித்தியாச்சு
சென்றுமே பிரம்மத்தில் கலக்கலாகும்!
செயலான எந்திரத்தி னாண்மை யாச்சே! 58

உச்சியிலுள்ள அரைவட்டத்திலும் எழுதி பூசை செய்தால் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் போன்றவை செய்யலாம்! மேலும் இதுவே மாயா வாசனையை ஒழித்து ஞானமுண்டாக்கும் பிரம்மவித்தையுமாகும்! முறையான பூசையால் மாத்ருகா தேவதைகளான அக்ஷரங்களின் சித்தி ஏற்பட்டு பிரம்ம சாக்ஷாத்காரம் அதாவது தானே தெய்வம் என்ற நிலை ஏற்படும். இதுவே இவ் வெந்திரத்தின் உண்மையான பலனாகும்!

ஆண்மையாமிந் நூல் கோர்வை அறியக் கேளு
ஆரமாம் ருத்திராக்கம் இருபத்தைந்து
ஆண்மையாந் திரு நீறு இருபத்தைந்து
அன்புள்ள அட்டமா சித்தி கூட
ஆண்மையாஞ் சோடசமே தொகையுமாகும்
ஆகாய சோதிடந் தானைனூறப்பா
ஆண்மையாம் யோக சூத்திரமுங் கூட
அளவிலாப் பிருகிரதி மாயைச் சதமு மாச்சே. 59

மேலுங் கேள்! இனி என்னால் எழுதப்பட்ட நூல் களைப் பற்றிச் சொல்கிறன் கேள்! ருத்திராக்ஷம் இரு பத்தைந்து, திரு நீறு இருபத்தைந்து, அட்டமா சித்தி பதினாறு, சோதிடம் ஐநூறு, யோகசூத்திரம், மாயாப் பிருகிரதி நூறு.

ஆச்சப்பா கலிதர்மமிரு பத்தைந்து
அதையடுத்து பஞ்ச பட்சி யிருபத்தைந்து
காச்சப்பா மை வித்தை யிருபத்தைந்து
கண்மணியே பரமாம்சம் தசமுமாகும்
மாச்சலிலா மமுர்தபிந்து பதினாறப்பா
மகிமையுள்ள மமுர்தநாதம் நாற்பன்மூணு
ஒச்சலிலா லதர்வசிரம் ஐம்பான் ரெண்டு
ஒருமையுள்ள வதர்வசிகை இருபத்தைந்தே! 60

கலிதர்மம் இருபத்தைந்து, பஞ்சபக்ஷி இருபத்தைந்து, மைவித்தை இருபத்தைந்து, பரமஹம்சம் பத்து, அமுர்தபிந்து பதினாறு, அமுர்தநாதம் நாற்பத்திமூன்று, அதர்வசிரம் ஐம்பத்திரெண்டு, அதர்வ சிகை இருபத்தைந்து!


ஐந்தான நூல்கள் பல எழுதி வைத்தோம்!
யிவைகணக்கு ஆயிரத்து ஒன்றுமாகும்!
மைந்தனே மாந்திரீக நூறு மின்னூல்
மெத்தவே மிகநன்று கலியுகத் தோர்க்கு
சையோக மிகவதிகஞ் செய்ய வேண்டாஞ்
சேயரிவை பெறுவதற்கே இவற்றின்நோக்கம்
மைவிழியாள் கடைக்கண்ணின் பார்வைநீக்கி
மெய்யான மாந்திரீகர் வழியில் நில்லே ! 61

இருபத்தைந்து என்ற தொகையுள்ள பாடல்களைக் கொண்ட நூல்கள் என்னால் பல இயற்றப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தத் தொகை ஆயிரத்து ஒன்றாகும். இந்நூல் மாந்திரீகம் நூறு என்ற பெயர் கொண்டது. இதை நன்றாகப் படித்தால் நன்மையுண்டாகும். கலியுக மக்களுக்காகவே இதை எழுதியுள்ளோம். பெண்களின் மேலுள்ள காம ஆசையை விட்டுவிடு. காமம் என்பது ஆண், பெண் என்ற குழந்தைகளைப் பெறுவதற்கே யாகும், எனவே மைவிழியாளின் கடைக்கண் பார்வையில் சிக்காமல் உண்மையான மாந்திரீகர் நெறியில் நில்!

நில்லப்பா முன்சொன்ன எந்திரத்தை கீறு
நிசமான அக்ஷரத்தை முதலில் ஓது
கல்லப்பா மற்றதெல்லாம் பின்னே செய்வாய்
கசடறவே மாந்திரீகஞ் சித்தியாகும்
எல்லையிதற் கில்லையே சாகரமாகும்
எடுத்துரைக்க அரனாலு மாகாதையா!
சொல்கேட்டு ஓங்கார மார்க்கந் தன்னை
செபித்தாக்கால் தேவதைகள் சித்தியாச்சே! 62

முன்பு கூறிய (க்ஷ) அக்ஷர எந்திரத்தை கீறிக் கொண்டு ஓம் அம் நம: முதல் ஓம் அஹம் நம்: வரையிலான நாற்பத்தெட்டு அக்ஷரங்களையும் தனித்தனியாக லட்சம் முறை செபித்து சித்தி செய்து கொண்டால் கடல்போன்ற மாந்திரீகத் தொழில் சித்தியாகும். இவ்வளவு எளிமையாக கூற சிவபெருமானாலும் முடியாது. முதலில் அக்ஷரங்களை சித்திசெய்து கொண்டு பிறகே தேவதைகளை வசியஞ் செய்யவேண்டும். அப்பொழுதுதான் சித்தி ஏற்படும்!

சித்தி கணபதி யந்ரம்



சித்தியாங் கணபதியின் பீசங் கேளு
சிகார ஓம்- ஹ்றாம்- ஹ்றீம் ஹ்றோம்
முத்தி கங்-கணபதயே நமஹவென்று
முழுமனதாயொரு லக்கமுருவோது

பத்தியாய் பால்கடலை: கனியும், வெல்லம்
பகடில்லா தூபதீபங் கொடுத்துவோது
கத்திகொண்டு சீவினாற்போல் எல்லாஞ்சித்தி
காட்டுவேன் முக்கோணம்கீழ்மேல் வட்டந்தாக்கே! 63

சித்திகணபதியின் பீசஞ் சொல்கிறேன் கேள்! ஓம்-ஹறாம்- ஹறீம், ஹ்றூம் கங் கணபதயே நமஹ! என்று ஒரு லக்ஷம் முறை செபம் செய்தல் வேண்டும். செபிக்கும் பொழுது பால், கடலை, பழவகைகள், வெல்லம் போன்றவை வைத்து தீப தூபம் காட்டி செபித்தல் வேண்டும். இனி இவருடைய சக்கரத்தைக் கேள்! தலை கீழான ஒரு முக்கோணமும் அதன்மேல் ஒருவட்டமும் வரைந்துகொண்டு.

தாக்குவாய் அதன்மேலே மூன்றுவரைதானும்!
தப்பில்லா வாசலது நான்கு வைத்து
தாக்குவாய் யட்ட திக்கு பாலர் தன்னை
தப்பாமல் வாசலது தேவதை தானும்!
தாக்குவாய் இடையதுவில் கங் கணபதயே
தவறில்லா நமஹறவென்று குறித்து நீயுந்
தாக்கும் ஹறாம்-ஹறீம்ஹறூ மென்றே தான்
தப்பாமல் வட்டமுக்கோணமிடையில் வையே! 64

அந்த வட்டத்தின் மேல் மூன்று அறை நான்கு வாசலும் கீறிக்கொண்டு வாசலில் தேவதைகளை நிறுத்தி உட்பக்கம் அஷ்டதிக்பாலர்களை தாபித்து முக்கோண நடுவில் கங்-கணபதயே நமஹ என்றும் முக்கோணத்திற்கும் வட்டத்திற் கும் இடையில் ஹறாம்- ஹறீம்-ஹறூம் என்றும் எழுத வேண்டும்.

வைத்திடுவாய் இவையாவும் ரவிலோகத்தில்
வகையாக அந்தி சந்தி இருநேரந்தான் !
பையவே தீர்த்தமாடி நீறு பூசி
பகடில்லா கலைத் தோலிலமர்ந்து கொண்டு

நையவே மனந்தன்னை மூலந் தன்னில்
நிறுத்தியே லக்கமுரு செபிக்கச் சித்தி
மையலே தானகற்றி மனதை வைத்து
மண்டலந் தான் செபிக்க முறையு மீதே! 65


மேற்கூறிய சக்கரத்தை செம்பாலான தகட்டில் கீறிக் கொண்டு காலையும் மாலையும் குளித்து விபூதியணிந்து கொண்டு மான் தோல் ஆசனத்திலமர்ந்து மனதை மூலாதாரத்தில் வைத்து லக்ஷம் உரு செபித்தால் சித்தியாகும். இதேபோல் ஒரு மண்டலம் விடாமல் செய்தல் வேண்டும்! மனதை எங்கும் அலைபாய விடக்கூடாது. (குறிப்பு: ஒரு மண்டலத்தில் லக்ஷம் உரு செய்ய வேண்டுமாகையில் இலட்சத்தை 48ல் வகுத்து நாளொன்றுக்கு வரும் கணக்குப்படி செபம் செய்தல் வேண்டும். அதாவது நாளொன்றுக்கு காலை 1508ம் மாலை 1508ம் செபித்தல் வேண்டும். குறைவான பின்னத்தில் செய்தலாகாது!

முறையான ஆறுமுகன் வசிய பீசம்
வழுத்துவேன் சீடனே அன்பாய்க் கேளு!
தறையவே சரவணபவா வென்று
தப்பாமல் ஐயுங் கிலியுஞ் சவ்வும்
குறையிலா ஓம் சுவாகா கூறி நீயுங்
குற்றமற லக்கமுரு செபித்து போடு!
கறையில்லா அறுகோணம் வட்டம் மேலே
கண்மணியே அட்டவிதழ் வரையும் மூன்றே! 66

இனி ஆறுமுகனின் வசிய பீசத்தைக் கேள். சரவணபவ ஐயும் - கிலியும் -சவ்வும் ஓம் சுவாகா என்பதே! இதை லக்ஷம் முறை செபம் செய்தால் சித்தியாகும். மேலுங்கேள்! அறுகோணம் கீறி அதன்மேல் வட்டமும் வட்டத்தின் மேல் எட்டு இதழ்களும் அதன்மேல் மூன்று வரைகளும் வரைதல் வேண்டும்!

மூன்றான வரை யிடையில் வாசல் நான்கு!
        முக்கியமாய் வாசலதில் தேவதை வைத்து
சான்றான எட்டிதழில் எட்டு சத்தி
        செகங்காக்கு மட்டத்திக்கு பாலர் மேலே
தோன்றியதோற் ஐயுமுடங்கிலியுஞ் சவ்வும்
        தப்பாமல் மாறுவா யிடையே தன்னில்!
...................றிய ....வ................. வென்று.................
        ....எல்லா........................... 67

ஆறுமுகன் யந்ரம்



மூன்று வரைகளின் இடையில் நான்கு வாசலும், அவ்வாசலில் தேவதைகளின் பெயரும் எட்டு இதழ்களில் எட்டு சக்திகளையும் உள்ளே அறுகோணத்தில் ச-ர-வ-ண-ப-வ- என்று.

கோணத்தின் மத்தியில் ஐயுங்கிலியும், சவ்வும் ஓம் சுவாகா என்றுஎழுதுதல்வேண்டும். (கடைசி இரண்டு அடிகள்சிதைந்துவிட்டன).

செய்திடுவாய் யந்திரந்தான் சுங்கன் லோகம்!
சுகமாக பரிமளம் தீபதூபங்
கொய்ததோர் பூச் சாற்றி பூசைபண்ணி.
குறிப்புடனே நாளொன்றுக் காயிர மீறாய்
வெய்யாமல் தான் செபிக்க விலகும் பேய்கள்!
வெகுமானஞ் செனவசிய ராச போகம்,
கய்யிலே வந்ததொரு கனியைப் போன்று!
கடாட்சிப்பார் ஆறுமுக சாமி தானே! 68

மேற்கூறிய எந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து அத்தர் சவ்வாது போன்றவைகள் பூசி தீப தூப நெய்வேத்யம் காட்டி ஒரு நாளைக்கு 2008 உரு வீதம் செபம் செய்து வந்தால் பேய் பிசாசுகள் விலகும். ராஜ வசியம், ஜெனவசியம் போன்றவை ஏற்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல் சகல காரியங்களும் கைகூடும்!

தானான வைரவரின் பீசஞ் சொல்வேன்!
தயவில்லா சத்திராதி வீழக் கேளு!
கோனான ஓம்-ஐம்-ஹ்ரீம்-க்லீம்.
கொற்றவனே ஜ்வல ஜ்வல மஹா பீம
மானான பராக்ரமாயா சத்ரு நாசநாய
மகிமையுடன் ஹண,ஹண தகதக
கானான பாஸய பாஸய வென்றுமேலுங்
காட்டுவேன் ஹூம் பட் ஸ்வாஹா யந்தம்! 69

இனி பைரவரின் மந்திரஞ் சொல்கிறேன் கேள்! ஓம்-ஐம்-ஹ்ரீம்-க்லீம் ஜ்வல- ஜ்வல- மஹாபீம பராக்ரமாயா சத்ரு நாஸநாய ஹண, ஹண, தக. தக, பாஸய பாஸய ஹூம் பட் ஸ்வாஹா என்று செபித்தல் வேண்டும். இதனால் சத்ருக்களின் தொல்லை நீங்கும்!

அந்தமாய் லக்க முரு செபிக்க மேன்மை
அதிர்ந்திடுவர் சத்திராதி மிருகம் யாவும்!
பிந்தியே சக்கிரத்தை யறிய வேண்டில்
பிழையறவே வைரவத்தின் இருபத்தைந்தை!
முந்தியே கூறியதோர் சுப்பிரணின் மாரல்
முக்கியமாய் யாறுமுகந் திருபத்தைந்து!
சந்தியே வராகி தன் பெருமை வேண்டில்
சத்தியமாய் அந்நூலா மிருபத்தைந்தை நோக்கே! 70

ஆனால் இம்மந்திரத்தை லக்ஷம் உரு செபித்தால் சித்தியாகும்! இதனால், துஷ்ட மிருகங்கள், சத்ரு தொல்லை போன்றவை நீங்கும்! ஆனால் பைரவனின் மந்திர சக்கிரத்தை அறிய வேண்டுமானால் என்னால் எழுதப்பட்ட வயிரவம் இருபத்தைந்து என்ற நூலைப் பார்! மேலும் முன்சொன்ன சுப்பிரமணியரின் மாரல் (அஷ்ட கர்மம்) பற்றி யறியவேண்டில் அறுமுகம் இருபத்தைந்து என்ற நூலைப்பார்! மேலும் வராகியைப் பற்றி முழுமையாக அறிய வேண்டில் வராகி இருபத்தைந்து என்ற நூலைப் பார்ப்பாயாக!


நோக்கவே தனந்தானும் விருத்திகாண
நன்மையுள்ள குபேரனின் பீசங் கேளு!
தாக்கவே ஓம்-ஸ்ரீம்- யக்ஷாதிபதிபதயே
தப்பாமல் சர்வ தனம் ஆகர்ஷணாய!
போக்கவே ஹூம் பட் ஸ்வாஹா என்று,
பொலிவாக லக்க முரு செபிக்க மேன்மை
காக்கவே தனந்தானும் விருத்தி காணும்!
கடுமையாம் வறுமை பிணியகன்று போமே! 71

இனி செல்வம் விருத்தியாக குபேர மந்திரஞ் சொல்கிறேன் கேள்! ஓம்- ஸ்ரீம் -யக்ஷாதிபதயே சர்வ தனம் ஆகர்ஷணாய ஹூம் பட் ஸ்வாஹா என்று லக்ஷம்முறை

செபம் செய்தல் வேண்டும். இதனால் தன (செல்வம்) விருத்தியாகும், வறுமையகலும், பிணிகள் (வியாதிகள்) போகும்!

போமேதான் மந்திரத்தை நிறுத்தி ஒத
        புகழான எந்திரத்தை சாற்றக் கேளு!
ஆமே நீ அறுகோணங் கீறிக்கொண்டு
        அதன்மேலே அட்ட இதழ் யீராய் மாட்டி!
தாமே யதன்மேலே வரைகள் மூன்றாய்!
        தப்பாமல் வாசலது நான்குங் கீறி,
ஓமேதான் அட்டசத்தி சோடச பீசம்
        ஒழுங்கான வாசல் தேவதையுஞ் சூட்டே! 72

குபேரன் யந்த்ரம்



மந்திரத்தை செபிப்பதற்கு சக்கிரம் சொல்கிறேன் கேள்! முதலில் அறுகோணம் வரைந்து கொண்டு அதன் மேல் எட்டு இதழும் மேலும் எட்டு இதழ் அதன் மேல் வரைந்து வெளியில் மூன்று வரை நான்கு வாசலும் வரைந்து எட்டு சக்திகளையும் எட்டு பீசங்களையும் வரைந்து காவல் தேவதைகளை நிற்க வைத்துப் பூசிக்க வேண்டும்!

சூட்டுவது மனந்தன்னை மூலம் நாட்டி!
சுகமான மந்திரத்தை உருவே செய்ய
வாட்டாது மூத்தாளாந் தேவி போவாள்
வளமான லக்குமியின் வாசமாகும்!
காட்டியதோர் படிசெய்தா லெல்லாமாகும்
காசினியில் வமிசத்தில் வறுமை யேது
மாட்டியது ப்ருகு நூலில் சூதுமில்லை,
மங்களமே எந்நாளும் மேலுங் கேளே! 73

பூசிக்கும் பொழுது மனதை ஆக்கினையில் நிறுத்தி மந்திரத்தை செபிக்க வேண்டும். இம்மந்திரத்தின் சித்தியால் லக்ஷ்மி தேவி வசமாவாள். மூதேவி விலகிச் செல்வாள். எவர்கள் இந்த மந்திரத்தை சித்தி செய்து கொள்கிறார்களோ அவர்களுடைய வமிசத்தில் பல தலமுறைகளுக்கு வறுமையே இருக்காது. எந்நாளும் மங்களமே உண்டாகும்!

கேளப்பா ஆதியாஞ் செகத்தின் தோற்றம்!
குறிப்புடனே பிரம்மனவன் தோற்றந் தானும்!
சேளப்பா வாணியாஞ் செல்வி தோற்றம்!
செயமான வேதத்தின் தோற்றந் தானும்!
கோளப்பா கோள்களுட தோற்றங்கூட,
குறிப்புடனே மூவருட தோற்றந்தானும்,
ஆளப்பா அனைவருட தோற்றந்தானும்!
அச்வமென்ற மூர்த்தியிட முண்டாயிற்றே! 74

ஆதியான பிரபஞ்சத்தின் தோற்றமும், பிரம்மாவின் தோற்றமும் சரஸ்வதியின் தோற்றமும், ஸ்ரீயின் தோற்றமும், வேதத்தின் தோற்றமும், நவக்கிரகங்களின் தோற்றமும், மும்மூர்த்திகளின் தோற்றமும், தேவர்களின் தோற்றமும் ஆதியில் குதிரை முகங் கொண்ட மூர்த்தியிடமிருந்தே உண்டாயிற்று!

உண்டான வாறுகேள் நன்றாய்ச் சொல்வேன்,
உலகமது தோன்று முன்னப்பு வாக.
மண்டலமே வியாபித்து நின்றபோது!
மதிகெட்ட வசுரர்கள் சுயம்புவாக
கொண்டல் வண்ணன் கர்ணமலந் தன்னிலே தான்!
குறும்பராம் வசுரர்கள் மிதுனமாக!
தண்டங் கொண்டேகியே சாகரத்தில்
தாமரையிலமர்ந்ததோர் அயனைக் காண! 75

உண்டான முறையைக் கூறுகிறேன்கேள்! உலகத்தோற்ற மொடுங்கி எங்கும் நீர்மயமாய் நின்றபொழுது இரண்டு அசுரர்கள் விஷ்ணுவினுடைய காதிலிருந்து சுயமாகத்தோன்றி கையில் பிரம்புடன் வளர்ந்து அந்த ஜலமயான சமுத்திரத்தில் சுற்றி வரும்பொழுது தாமரை மலரில் யோக நித்திரை கொண்ட. பிரம்ம தேவரைக் கண்டனர்!

காணவே வலியாகச் சென்று ஏகி
கசடரவே யுத்தமே செய்ய வேண்டி,
தோணவே பிரம்மனைத் தான்
தூக்கமென்ற நிட்டைதனை கலைத்தபோது,
பூணவே பிரம்மரவர் ஞானந் தன்னால்
புவ்வியமாய் அசுரர்களை நோக்கிமெள்ள,
ஊணவே வேண்டுவரம் கேளுந் தாரேன்.
உலகமதில் மரணமது வேண்டேன் தானே. 76

பிரம்ம தேவரைக்கண்ட அசுரர்கள், அவருடன் யுத்தஞ்செய்ய எண்ணங் கொண்டு நிட்டையிலிருந்த பிரம்மதேவரை எழுப்பினர், நிட்டைகலைந்த பிரம்ம தேவர் அவர்களை நோக்கி ஏ! அசுரர்களே என்னை வெல்லுதல் உங்களால் முடியாது. ஆகவே வேண்டும் வரங்களைக் கேளும் என்றார். அதற்கு அந்த அசுரர்கள் இவ்வுலகில் எங்களுக்கு மரணமென்பதே இல்லாத வரம் கொடுங்கள் என்றனர்!

தானான எந்தனுக்கே முடிவுவுண்டு
    தப்பில்லா வேறொன்று கேளுந் தாரேன்
கோனான பிரம்ம னென்ற தேவா பாரீர்
    காசினியில் மரணமது நினைத்த வண்ணம்
மானான மகேசன் போல் வாழ வேணும்
    அனிமாதி சித்தியது தாரீறையா
தேனான மொழி படைத்த பிரம்ம தேவர்
    தப்பாது அங்கனமே ஆக வென்றார். 77

அப்பொழுது பிரம்மதேவர் அசுரர்களை நோக்கி பிரம்மதேவரான எனக்கே முடிவுண்டு. ஆகையால் அதைத்தவிர வேறேதாவது கேளுங்கள் என்றார். அதற்கு அசுரர்கள் மரணமானது நாங்கள் நினைத்த வண்ணமே எங்களிடம் வரவேண்டும், என்றுகேட்க, பிரம்மதேவரும் அங்கனமே ஆகுக என்றார்!

என்றதோர் வரம் பெற்ற அசுரர் தானும்
    எடுத்திட்டார் பிரம்மன்கை வேதந்தன்னை.
சென்றுமே பிரம்மரவர் மாலிட மேகி
    செகந் தன்னை காக்கவே வேண்டிநிற்க.
வென்றுமே வாழ்ந்திடுவீர் அஞ்சல் வேண்டா
    வெகுவிரைவில் வேதமதை மீட்கப் போரேன்.
நன்றுதரா அசுரர்கள் வதையுமாகி
    நானிலத்தில் வேதமதை போதிப்பேனே. 78

வரம் பெற்ற அசுரர்கள் உடனே பிரம்மனிடமுள்ள வேதத்தை அபகரித்துச் சென்றனர். வேதத்தை இழந்த பிரம்மதேவர், திருமாலிடம் சென்று முறையிட திருமாலும் பிரம்மனை நோக்கி கவலையை விடும். நான் அந்த அசுரர்களை வதைத்து வேதத்தை மீட்டுவந்து உலகிற்கு உபதேசஞ் செய்வேன்!

போதிப் பேன் என்றிட்ட மாலன்தானும்
புகழ் பெரிய குதிரைபோல் ரூபங் கொண்டு.
வாதித்தே வசுரர்களை வதைத்துப்பின்னே
வளமான வேதமதை மீட்டும் வந்தார்.
சாதித்த செய்கைதனை யறிந்த பிரம்மன்
சோத்தரித்து தண்டம் போல் வணங்கி நின்றார்.
சோதித்து வேதமதை உபதேசஞ் செய்து
சோதி போல் ரூபங் கொண்டேகினாரே. 79

இவ்வாறு கூறிய திருமாலானவர், குதிரை போன்று ரூபந்தரித்து அசுரர்களை கொன்று வேதத்தை மீட்டு வந்து பிரம்ம தேவருக்கு உபதேசஞ் செய்தார். இதனால் பிரம்மதேவ ர் மிகவும் சந்தோஷமடைந்து தண்டம் போல் பூமியில் விழுந்து வணங்கி ஸ்தோத்திரம் செய்தார். பிறகு அந்த குதிரைமுகங் கெண்ட பகவான் சோதி ரூபங்கொண்டு அவ்விடத்திலேயே மறைந்து போனார்!

ஏகிய மூர்த்தியே ஞான மூர்த்தி
ஏதுகாண் இவரன்றி ஞானம் யோகம்.
யோகி மனந்தனிலே விருக்கும் மூர்த்தி
யுலகத்தில் ஆதியாம் ஞானமூர்த்தி
போகியே யானாலும் வணங்கல் வேண்டும்
பூ வுலகில் ஞானத்துக் கிவரே யாதி,
பாகியே இவர் தன்னை வணங்கினாக்கால்
பகடேது சூதேது மாயை யேதே. 80

பிரம்மாவிற்கு ஞானம் புகட்டியவரும் வேதத்தை மீட்டவருமான இவரே ஞானமூர்த்தியாவார், இவரன்றி உலகில் ஞானமும், யோகமும் பிரகாசிக்காது! உலகத்தில் ஆதியான ஞானமூர்த்தியானவர் இவரே. எல்லோருடைய மனதிலும் புத்தியிலும் பிரகாசிக்கிறார். இவரை வணங்கினால் ஞானமும் யோகமும் சித்தியாகி மாயை விலகும். இதில் எந்த சூதும் கிடையாது செல்வத்தை விரும்புகிறவனும் இவரை வணங்குதல் வேண்டும்

மாயை தான் விலகவே ஞானஞ் சொல்வேன்
மங்களமே யென் நாளும் மங்களில்லை.
தாயைத் தான் பூசிக்க விவரருள்வேணும்
தரணிதனில் தாய் விட்டால் ஞானமில்லை
காயைத்தான் தின்பதால் ஞானமாமோ
களங்கமற அசுவ மூர்த்தி பூசை வேணும்
பேயைத்தான் வோட்டிட மாந்திரீகம்.
புவிதனிலே மனப்பேய்க்கு ஞானந்தானே. 81

மாயை விலகுவதற்காகவே ஞானம் சொன்னேன் ஞானம் பெற்றால் மங்களமாக வாழலாம். மங்கலகாது! ஞானமடையவேண்டுமானால் தாயாரைப் பூசிக்க வேண்டும் தாயாரை பூசிக்க வேண்டுமானால்ஞானமூர்த்தியின் அருள்வேண்டும். ஆகவே குதிரைமுகங்கொண்ட ஞானமூர்த்தியை பூசை செய்! உலகத்தில் உள்ள பேய்களை விரட்ட மாந்திரீகஞ் சொன்னேன். மனப்பேயை அடக்க ஞானத்தை கூறினேன்!

பேயொழிய ஞானந்தான் வருதல் வேணும்
பேசினேன் ஞானத்துக் கட்சர சித்தி!
பேயொழிய யட்சரத்தின் சித்தியுள்ளே
பேசினேன் வித்யாராசன் பீசம்.
பேயொழிய யசுவ மென்ற ராசன்தன்னை
பேசாது விருந்துமே பூசை பண்ணி.

பேயொழித்து வாழ்ந்திடுவாயெந் நாளுந்தான்
பேசுவே னிதன்மேலே யின்னுங்கேளே. 82

மணப் பேய் ஒழியவேண்டுமானால் ஞானம்வேண்டும் அதனால் அட்சர சித்தி எந்திரத்தில் வித்தியாராசன் பீசத்தை சொல்லியுள்ளேன். அதன் படி மௌனமாக இருந்து கொண்டு குதிரைமுகங்கொண்ட அவரை வணங்கினால் மணப்பேய் ஒடுங்கிவிடும். இனிமேலும் சிலவற்றை சொல்கிறேன் கேள்! (50ம் பாட்டில் அட்சர சித்தி எந்திரம் உள்ளது. 54 பாட்டில் வித்தியாராசன் பீசம் உள்ளது அதுதான் அவருடைய மந்திரம்) அதா வது ஓம்- ஸ்ரீம்- ஹரீம்- ஐயுங்- கிலியுஞ். சௌவும் நமோ பகவதே வித்யாராஜாய அட்சர பிரம்மாய வித்யா ராசாய ஸ்வாஹா! இதுவே குதிரைமுகங் கொண்ட வித்யா ஞானமூர்த்தியின் மந்திரம்!

கேளேநீ எந்தனுட திறவுகோலை
குறிப்பறிந்து பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
பாளே நீ போகாமல் பக்குவமாகி
பதமறிந்து அந்நூலை வாங்கிப் பாரு.
ஏளே நீ தொகையது தான் இயம்பக்கேளு
எடுத்திட்டேன் முன்னூற்றுச் சொச்சஞ் சொச்சம்.
தேளே தான் கொட்டினாற் போல் மாந்திரீகம்
தொல்லுலகில் பலிதமடா கூர்ந்து பாரே. 83

மேலுங்கேள்! என்னால் எழுதப்பட்ட மாந்திரீகத் திறவுகோல் 300 என்ற நூலை வாங்கிப்பார் அதில் கூறிய முறைப்படி நீ செய்தா யானால் தேள்கடி போல் சுரீர்என்று பலிதங்காணும்!

பாரப்பா அனுமந்தன் வசியங் கட்டு
பகன்றிடுவேன் பதறாது உற்று நோக்கு.
ஆரப்பா அறிவார்கள் இவரின் கூத்து
ஆணுவத்தை வென்றவர்கள் அறிவாரையா.

கூரப்பா ஓம் ஹரி ஆதியென்று
குற்றமிலா நாராயணா மேலும்
சேரப்பா அகிலாண்ட நாயகாவென்று
சொல்லிடுவாய் நமோ நமோ என்றே. 84

இனி அனுமாரின் வசியத்தையும் கட்டுமந்திரத்தையுங்கூறுகிறேன் கேள். இவருடைய தன்மையை ஆணவத்தை வென்றவர்களால் மட்டுமே அறியமுடியும். மற்றவர்களால் அறியமுடியாது இனி மந்திரத்தைக் கேள்!

என்றுமே யனுதினமும் ஓதுமனுமந்தா
லெங்காபுரி ராவண சம்மாரா.
சென்றுமே சஞ்சீவிராயா மேலும்
சீக்கிரம் ஓடிவா உக்கிரமாவே ஓடிவா.
வென்று நீ படுத்து படுத்து வரும்
விதமான பில்லி சூனியம் பேய்பிசாசும்.
கொன்றுமே பிரமராக்ஷசிகளைப் பிடி பிடி
குலுங்க அடி அடி கட்டு கட்டே. 85

கட்டிப் பின் வெட்டு வெட்டுக்
கதறக் கொட்டு கொட்டு நீ.
முட்டி நீ தாக்கு தாக்கு ஓம்
மேலும் ஆம் மிளைய வநு மந்தா.
கட்டி வா வா சுவாஹா கூறு நீயும்
காட்டிய மந்திரந் தன்னை மைந்தா.
மட்டில்லா பஞ்சமுறை சொல்லிப் பின்னே
மயங்காமல் நீறெடுத்து தூவுத்தூவே. 86

மந்திரம்

ஓம் ஹரி ஹரி ஆதி நாராயணா அகிலாண்டநாயகா நமோ நமோ என்று அனுதினமும் ஓதும் அநுமந்தா லங்காபுரி

ராவண ஸம்ஹாரா, சஞ்சீவிராயா ஓடிவா, உக்ரமாகவே ஓடிவா, அடுத்து அடுத்து வரும் பில்லி, சூனியம், பேய் பிசாசு பிரம்ம ராக்ஷசிகளை பிடிபிடி அடிஅடி கட்டு கட்டு வெட்டு வெட்டு கொட்டு கொட்டு கொட்டு தாக்கு தாக்கு ஓம் ஆம் இளைய அநுமந்தா வாவா ஸ்வாஹா என்ற மந்திரத்தை ஐந்து முறை கூறி விபூதியை தன்னைச் சுற்றித் தூவிக் கொண்டால்.

தூவினால் திக்கெல்லாம் கட்டலாச்சு!
துப்புரவாய் செய்வினையும் நீங்கலாச்சு!
பாவிதா னானாக்கால் ஏது மேன்மை!
பகடில்லா முன்மூலம் உருவைக் கேளு!
சேவியே சகத்திரமே உருவை யேற்றி!
செய்தப் பின் பஞ்சு முறை கூறித் தூவு
கூவியே அழைத்திட்டால் ஆஞ்சனேயர்
குறிப்புடனே எதிராவார் யேது தாழ்வே! 87

தீக்கெல்லாம் கட்டாகும். யார் நமக்கு செய்வினை செய்தாலும் அது நம்மைத் தொடாது. பாவிக்கு இந்த மந்திரம் பலிதமாகாது: முதலில் அந்த மந்திரத்தை ஆயிரம் முறை செபித்த பின்னரே பிரயோகம் செய்ய வேண்டும். அதன் பிறகுதான் ஐந்து முறை கூற சித்தி யாகும் இந்த மந்திரத்தின் சித்தியால் கூப்பிட்ட குரலுக்கு அஞ்சனேயன் ஏன் என்று கேட்டு எதிரே நிற்பான்!

தாழ்வில்லை வனுமான் போல் ரூபம் பண்ணி,
தப்பாது மாலையுடன் கனிபுஷ்பம் வைத்துமுன்னே
பாழில்லா தீப தூப நைவேத்யங்கள்
பக்குவமாய் வைத்துருவே ஏற்று! ஏற்று
ஆழிதனை கடந்திட்ட அனுமந் தானும்
அக்கணமே வசமாவார் சம்மய மேது

ஊழ்வினை தானகற்றி உருவைச் சேவி
உத்தமனே மேல் மூலங் கேளு கேளே.! 88

முதலில் அனுமாரைப் போல் ஒரு விக்கிரகஞ் செய்து கொண்டு பின்னர் அதற்கு முன்பாக தீப தூப நெய்வேத்யங் களை வைத்து கனிபுட்பம் போன்ற வற்றால் உபசாரம் செய்து முன்சொன்ன மந்திரத்தை செபித்தால் கடலைத் தாண்டிய அனுமார் உனக்கு வசமாகி நிற்பார். இனி இன்னுமொரு மந்திரத்தைக் கேள்!

கேளே நீ ஓங்காரம் முன்னே நாட்டி!
குறிப்பிட்ட றீங்காரம் பின்னே நாட்டு
கேளே நீ யதன் பின்னே ஹ்றீயுமாகும்!
குறிப்புள்ள மர்க்கட மர்க்கடாய வென்று
கேளே நீ சுவாகா யந்தந் தன்னில்!
குற்றமிலா முறையாக லக்கமுருசேவி
கேளே நீ வேண்டும் வரம் அளிப்பாரையா
குவலயத்தில் இதுபோல மந்திர மேதே! 89

ஓம்- றீங்- ஹ்றீம்மர்க்கட மர்க்கடாயஸ்வாஹா! என்ற மந்திரத்தை லட்சம் முறை செபித்தால் நீ வேண்டிய வரம் யாவும் அனுமார் அளிப்பார். இவ்வளவு எளியதும் சக்தி வாய்ந்ததுமான மந்திரம் இவ்வுலகில் வேறு இல்லை!

ஏதுகாண் மந்திரத்தை செபித்த பேர்க்கு
எதிராளி இல்லையே எங்குத்தானும்!
ஓதிடவே பேய் பில்லி வைப்பு ஏவல்.
ஓடிடுமே மந்திரத்தை கேட்ட நேரம்!
சாதுபோலிருந்துமே செபத்தைக் கூறு!
சத்தியத்தை மீறாது யிருந்து வாழு
காதுகொண்டுங் கேளாதே பொய்மைதன்னை
காசினியில் ராசன்போல் வாழ்கு வாழே! 90

இந்த மூல மந்திரத்தை லட்சமுறை செபித்த அன்பரின் பேரைக் கேட்ட மாத்திரத்தில் உலகிலுள்ள சகல பேய் பில்லி, ஏவல் வைப்பு போனீறவை கதறி வோடும். அஹிம்சையில் இருந்துகொண்டு இந்த மந்திரத்தை செபிப்பாய் எக்காரணத்தைக் கொண்டும் பொய்யானவார்த்தையைசாதுலும்கேளாதேஇம்மந்திரத்தைசித்திசெய்து கொண்டு இவ்வுலகில் இராசன் போல் வாழ்வாயாக!

வாழவே இன்ன மொன்று சொல்லக் கேளு!
வகையான மந்திரத்தை ஐந்து லக்கமோதி!
தாழாது வாகாசந் தன்னில் மைந்தா!
தப்பாமல் தம்பித்து உற்று நோக்கி !
பாழாது பாயவே பறக்க லாகும்!
பக்குவமாய் வாயுவது செயமுமாகும்!
ஊழேது உன்னிடத்தில் ஒழியலாச்சு!
உத்தமனே என்ற நாமம் பெறுகுவாயே! 91

மேல்கூறிய அனுமாரின் மந்திரத்தை ஐந்து லட்சம் முறை செபம் செய்து ஆகாச ஸ்தானமான ஆக்கினையில் மனதை வைத்து வெளியாகாசத்தை உற்று நோக்கி மூச்சை உள்ளே வாங்கி நிறுத்தி தம்பித்து கும்பகம் செய்தால் ஆகாசத்தில் பறக்கின்ற சித்தி யுண்டாகும். இதனை செய்து நீ உத்தமன் என்ற பேர் பெற்று வாழ்வாய்.

பெறுவதற்கே முறையான மார்க்கஞ் சொன்னேன்
பொதுமையவள் காமவிழி தன்னை நீக்கி!
உறுவதற்கே வாசிதனை யிறுத்தி வைத்து!
உலகிலுள்ள மாண்பர்களைச் சேராநின்று!
நறுவதற்கு நமன் தனக்கு யிடங் கொடாமல்!
நாட்டினிலே நீயுமொரு சித்தனாகி!
மறுமையிலே வீடுபேறடைந்து வாழ
மாட்டினேன் என்மணியே மயங்கா நில்லை! 92

நீ சித்திகளை பெற்று வாழ்வதற்கும் மேன்மை பெற்று மறுமையில் நல்ல கதியடைவதற்கும் இம் மந்திரங்களை நான் சொன்னேன். ஆகவே பெண்ணின் காமவிழிக்கு அகப்படாமலும், உலகிலுள்ள கெட்ட மக்களுடன் இணங்காது நின்று கொண்டும், மாயையை வென்று மயங்காது நிற்பாய் ஆக!

நில்லென்று சொன்னாக்கால் நிற்பான்யோகி !
நிசம்போல் நடித்திடுவான் நாயாம் போகி !
கல்லொன்று கண்டாக்கால் ஓடும் நாய்போல்
காலன் வருங் காலமதில் கதறும் போகி!
செல்லென்றும் மெய்ஞான பாதை தன்னில்!
செயவாழ்வு தான் எக்காலத்தும்!
கொல்லென்றும் மாயை தனை ஞானவாளால்
கொட்டினேன் பன்முறையே உந்தனுக்கே! 93

நான் எவ்வாறு செய்யவேண்டும் என்று கூறினேனோ அவ்வாறு அதன்படியே நிற்பவன் யோகி! ஆனால் போகியானவன் யோகியைப் போன்று நடித்து ஏமாற்றுவான், உண்மையில் ஏமாறுவது அவன்தான்! எப்படி எனில், நாய் கல்லைக் கண்ட மாத்திரத்தில் கதறி ஓடும். அதேபோல் நாய்க்கு இணையான போகி காலன் (யமன்) பாசக் கயறிடும்போது தான் செய்த கர்மத்தை நினைத்து கதறியோடுவான்! (வாடு வான்) ஆகவே நீ உத்தமனாக இருந்து கொண்டு ஞான வாளால் மாயையை அறுத்து நிற்பாயாக. அதற்காகவே பலமுறை ஞானம் புகட்டினேன்!

உந்தனுக்கு என்றுதான் பாடி வைத்தேன்!
உலகிலுள்ள மக்க ளெல்லாம் வாழ வேண்டி!
சந்தனத்து வாடைபோலிருக்க வேணும்!
சந்த மென்ற இந்நூலைப் போற்ற வேணும்!

முந்தி பல வண்ணம் உரைத்தாற் போல!
வுலகுள்ள பேர்களுக்கு இந்த நூலாம்!
எந்தனுக்கு எதுவுந்தான் ஏற்றதல்ல
எந்தன் நூல் படிசெய்ய ஏற்றங் காணே. 94

உனக்கு என்றால் உனக்கு மட்டுமல்ல. இந்த உலகில் செனங்கள் யார்படித்தாலும் வாழ்க்கையில் முன்னேற வேண்டி இதை பாடிவைத்தேன். சந்தனம் மணம் காண்பதுபோல் நீயும் மணமாக பிரகாசிப்பாய்! தினமும் இந்த நூலைப் போற்றி வணங்கி இதிலுள்ள முறைப்படி உத்தமனாக நிற்கும் லோகமாண்பர்களே எனக்கு பிரிரீயத்தை செய்கின்றனர். மற்ற விதத்தில் எனக்கு சந்தோஷமில்லை!

காணவே நீ நூல் தானும் வெளிவருங்காலம்!
காட்டினேன் பாரதத்தின் வர்சந் தன்னில்!
கோனே வடபாகந் தன்னில் தானும்!
குறிப்பான வாட்சியது செய்வோன் நாமம்!
ஊனே தானில்லாது உலகு தன்னில்!
உரம் பிளந்தோன் நாமமது ஆதியாகும்!
மானே தான் தென்சார்பு வெற்றியக்கம்!
மங்கையவள் யாண்டிடுவாள் திராவிட நாடே, 95

இந்நூல் வெளிவருங் காலத்தில் பாரதவர்ஷம் எனப் பெயர் கொண்ட நாட்டின் வடபாகத்தில் எவருடைய வயிற்றும் பிறவாத அவதாரம் செய்த உரம் பிளந்தோன் என்ற மூர்த்தியின் பெயர் முதலில் இருக்கும் ஒரு மானிடன் ஆட்சி செய்வான்! (உரம்பிளந்தோன்- நரசிம்மன் இவர் தூணிலிருந்து வந்தவர். எவருடைய வயிற்றிலும் பிறக்கவில்லை). அதே போல் தென்னகத்தில் வெற்றி என்ற நாமம் முதலில் கொண்ட பெண் ஆட்சி செய்வாள் (வெற்றி... ஜெயம்).

நாடான இந்நாடே கர்ம நாடு!
நலமுள்ள ரிடிமுனிகள் வசிக்குந் நாடு
காடான காடுமலை யிருக்குந் நாடு
காசினியில் வாலயங்கள் பெருத்த நாடு
மேடான குன்றுகளும் மெத்தஉண்டு
மிடுக்கான நூல்கற்றோர் வதீத மையா!
ஓடுவாய் வெங்குமே திரிந்து பின்னே !
ஒடுக்கமாய் குகைதனிலே யொடுங்குவாயே. 96

இந்த பாரதவர்ஷம் என்ற பூமியானது மிகவும் மேன்மையானதாகும். இங்குதான் ரிஷிகளும், முனிவர்களும், அதிகமாக வசிப்பார். இதில்தான் மலைகளும், காடுகளும், குன்றுகளும், படித்த அறிஞர்களும் இருப்பார். ஆகவே நீ அங்கு சென்று பல வகையான மலைகளையும் ஆறுகளையும் பார்த்து அனைத்தையும் அறிந்து கொண்டு பின்னர் குகையில் ஒருமனதாய் தவம் செய்வாய்!

யொடுங்குதற்கே மாந்திரீகம் இந்நூல் சொன்னோம்!
யெங்குமே திரிந்தலைய வேண்டாமையா!
யொடுங்குதற்கே வாகாய கமனம் சொன்னேன்
மலையாது மனங் கொண்டு செய்து பாரு
ஓடுங்குதற்கே பல காதஞ் செல்ல வேணும்!
ஒழுக்கமாய் அநுமனையே சித்தி செய்து!
ஒடுங்குகவே ஆதிமூலந் தன்னை சேவி
ஓதிட்பின் அனுமனைதான் வசங் கொள்வாயே! 97

மனதை ஒடுக்கமாய் இருத்தி குகையில் தவஞ் செய்ய இந்த மாந்திரீகம் என்ற நூல் சொன்னோம், பல நாடுகளும் மலைகள், குன்றுகளை காணுவதற்காகவே ஆஞ்சனேயன் மந்திரம் என்ற ஆகாய கமனம் சொன்னோம்! முதலில்

மூலமூர்த்தியான விநாயகனைத் தொழுது வணங்கி அவருடைய மந்திரத்தை செபித்து பின்னர் ஆகாசத்தில் பறக்கும் சக்தியை அளிக்கும் மந்திரமான அநுமானின் மந்திரத்தை சித்தி செய்து கொள்!

கொள்ளவே இடையதுவில் சத்துருவந்தால்!
கொன்றிடவே மாந்திரீக வசியஞ் சொன்னேன்!
மெள்ளவே இவையாவும் சித்தி செய்தால்!
மாந்திரீகன் என்ற நாமம் கொள்ளலாகும்!
தள்ளவே பெண்போகம் நன்று நன்று!
தர்மமென்ற உன் மனையில் கூடி நில்லே!
பிள்ளைதனை பெறுதற்கே காமம் காமம்!
பிறந்தபின் அடங்குவதே சேமமாச்சே! 98

ஆகாசத்தில் பறந்து பல இடங்களில் சுற்றும் பொழுது இடையில் மானிடர்களும் மிருகங்களும் தொல்லை செய்தால்! அவர்களை கை கொள்ளவே மாந்திரீகம் என்ற தொழிலைச் சொன்னோம். ஆகவே பெண் போகத்தை வெறுத்து மனைவியுடன் அளவாக இருப்பதே தர்மமாகும். பிள்ளை சந்ததிகளை பெறுவதற்கே இறைவனால் காமம் என்ற புத்தி அளிக்கப் பட்டது. பிள்ளை பிறந்த பின் அதைமறந்து இருத்தலே க்ஷேமமாகும்! இதனாலே முறையான மாந்திரீகன் என்ற பெயர் கொள்ளலாகும்!

ஆச்சப்பா இந்நூல் தான் சதமுமாகும்!
அவையடக்கம் மிக சொன்னோம் அறிந்து நில்லு
பேச்சப்பா எதிரேது இந் நூலிற்கு!
பேசாது இருந்து நீ சித்திப் பண்ணு!
மாச்சப்பா இல்லாது காமிக்கூட
மாந்திரீகஞ் செய்தாக்கால் சித்தி மெத்த
கூச்சலிட்டு இதை நீயுங்கூற வேண்டும்
குவலயத்தில் பிரமத்தி லிருந்து போற்றே! 99

இந்த நூல் நூறு பாட்டைக் கொண்டதாகும். இதை அடக்கமாக வைத்துப் போற்று. இந்த நூலிற்கு எதிரான மற்ற நூல்கள் இல்லை. இதை தலைமுதல் கால் வரை பார்த்து சித்தி செய்! காமியும் இந்த நூலை படித்து மாந்திரீகம் செய்வானானால் அவனுக்கு சித்தி உண்டாகும். இதை வெளியில் யாருக்குஞ் சொல்லாதே! நீ சதாகாலமும் பிரம்மமான ஈசனை போற்றி வாழ்வாய் ஆக!

போற்று கிறேன் ப்ருகு யானும் நூலின்கண்ணு!
புவிதனிலே முனி ரிடிகள் பாதந் தன்னில்!
மாற்றியே வடமொழியை திராவிடத்தில்
மொழிதந்த முருகவேள் சிவத்தின் பாதம்!
சாற்றினேன் எனதத்தன் சதுர்முகனின் பாதம்
சாகரத்தின் தத்தனாம் மாலின் பாதம்!
போற்றியே வணங்கி மிக தண்டஞ் செய்து
புலம்பிய தோர்மாந்திரீக நூறும் முற்றே! 100

ப்ருகு முனியான நான் இந்த நூல் செய்ததின் பொருட்டும் இந்த நூலில் உள்ள கார்யங்கள் சித்தியாகும் பொருட்டும் முனிவர்களையும், ரிஷிகளையும் பணிந்து போற்றுகிறேன். மேலும் வடமொழியில் இருந்து தமிழ்மொழியில் செய்ததால் இதற்கு ஆதாரமான சிவபெருமானின் பாதமும் முருகவேள் பாதமும் வணங்குகிறேன். மேலும் எனது பிதாவான நான்முக பிரம்மதேவரையும், உலக பிதாவான நாராயணனையும் வணங்கி அவர்களுடைய பாதங்களில் தடிபோல் வீழ்ந்து வணக்கஞ்செய்து மாந்திரீகம் என்ற இந்த நூலை முடித்துக் கொள்கிறேன்.

ஓம்-தத்-ஸத்!

தாமரை
நூலகம்